தமிழ்ப் பொழில்

துணர் 9 மலர் 5

16 NOV 1923

JC
[illegible] 211, N15 [illegible]
N123.9.5
187458

14/43 Nov. 1923 உருத்ரோத்காரி-கார்த்திகைமீ

ஆனந்த போதினி

ANANDA BODHINI.

Vol. 9. No. 5

பொருளடக்கம்.

	பக்கம்.
1. கடவுள் வணக்கம்	... 161
2. நீங்குக்கும் துட்டு கெ... வாங்குவதா	... 163
3. வாலிபப்பருவம் பயங்கரமான காலம்	... 168
4. கம்பராமாயண நீதிச் செய்யுள்	
5. தனித்தமிழ்ப் பாதுகாப்பு	... 175
6. சந்நியாசம்—மோட்சமில்லை	... 181
7. ப்ரகாசமாகு	... 184
8. பிழைதிருத்தம்	... 186
9. மறுபிறப்பு (நம்மவர்க்கோர் எச்சரிக்கை)	... 186
10. பகவத்கீதை வசனம்	... 187
11. பொறுமை	... 190
12. வாழைமரம்	... 191
13. சோம்பேறித்தனமும் உழைப்பும்	193
14. அம்பாலிகை அல்லது அதிசய மரணம்	... 196
15. பொதுசமாச்சாரங்கள்	... 199
...ஞ்சாங்கம்	... 200
...ரங்கள்	

17 DEC

"ஆனந்தபோதினி"

சந்தா விவரம்.

		ரூ. அ. பை.
வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, ஸிலோன்	1—0—0
	பினங், ஸிங்கப்பூர், தென்னாப்ரிகா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு	1—4—0
நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை		0—2—0
சென்ற வருடங்களுடைய தனிச் சஞ்சிகை விலை		0—3—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

---

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாயிப் பெயரைஎழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னுடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

(3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2-அணு வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணு வி. பி. க்கு தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6 அதாவது 5-அணு சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம்தேதிவரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ் மாதமுடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர்கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்து கொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம்பொறுப்பாளி யல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் தலையாவது அனுப்பினுலன்றி விடையளிக்கப்பட மாட்டாது.

Life Subscription ஜீவிய சந்தா	இந்தியா, பர்மா, ஸிலோன்	ரூபா	15—0—0
	அன்னிய நாடுகளுக்கு	,,	20—0—0

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு	...	ரூபா.	30—0—0
அரைப் பக்கத்திற்கு ,,	...	,,	16—0—0
கால் பக்கத்திற்கு ,,	...	,,	8—8—0

எப்போதும் முழுத்தொகையும் முன் பணமாய் அனுப்பப்படவேண்டும்.

நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,

நெ. 6, வெங்கடேசமே[illegible] தெரு, தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

இரத்தினபுரி இரகசியம்

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றன வென்று கூறுகிறோம். இரண்டு பாகமும் விலை ரூபா 4 0 0

அமராவதி அல்லது அதிசய மர்மங்கள்.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாவல். ஒருமனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனு யிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம்பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவா னென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் அதியாச்சரியத்தை விளைத்து அடியோடு மனதைக் கவரத்தக்கதே. அசம்பாவிதமெனத் தோன்றும் அனேகச் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். இதில்வரும் முக்கிய பாத்திரங்கள் ஒவ்வொருவருடைய சரித்திரமும் ஒவ்வொரு வியப்பான துப்பறியும் கதையைப்போன்றிருக்கும். சுருக்கிக் கூறின் இந்த நாவலை யொரு அதிசயக் களஞ்சியமே யெனலாம்.

2-பாகமும் விலை ரூபா. 4.

கனகபூஷணம்.

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவாராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். சிறுவர்களுக்கு வேண்டிய நீதிகளும் நற்புத்திகளும் இதில் நிறைந்திருக்கின்றன. இந்த நாவல் ஆதிமுதல் அந்தம் வரையில் மனதை முழுதும் கவர்ந்துகொள்ளக்கூடியது. 2-பாகம் இதன் விலை ரூபா 3 8 0

மதனபூஷணம்.

இதில் குற்றவாளி உயிரோடிருப்பவனை இறந்து விட்டவனாகவும், இறந்து போனவனை உயிரோடிருப்பவனாகவும், படித்தோர் நம்பும்படி செய்வது மிக்க வியப்பையுண்டாக்கும். அத்தகைய கள்ளனுடைய குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துப்பறிபவன் சாமர்த்தியத்தையும் படித்துப் பார்ப்பது மிக்க அவசியமானது. தவிரவும் ஸ்திரீகளுக்கு அளவு மீறிய சுவாதீன மளிப்பதால் உண்டாகும் தீமைகள் இதில் நன்ருய் விளக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூபா 1.

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

இந்திராபாய்.

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்வன் கல்வி, சாஸ்த்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் சுய உருவத்தை காட்டாமலே செய்யும் மிக்க அபூர்வமானவையும், கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியானவையும், முதலில் அசம்பாவிதமாகத் தோற்றத் தக்கவையுமான பல கொலை களவுகள் மிக்க அதிசயமானவைகளாகவும் இதுகாறும் கேட்டிராத விதமானவைகளாகவுமே யிருக்கும்.

இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர் பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துகளிலிருந்து தப்புவதும், [illegible]றவும், முஷ்டிக்காரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் [illegible] செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும். இதன் விலை ரூபா 2 8 0

187458

ஆனந்தலிங்

(11-துப்பறியும் கதைகளடங்கிய கதைக் களஞ்சியம்.)

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதிலும் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன. தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தலிங்கின் அதி யபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி லுள்ளவர்களும், கல்வி யறிவுடையோரு மாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையு மளிக்கும். இந்த நாவல் முழுமையும் புத்திக்கு மிக்க நன்மையளிக்கும் உணவு நிறைந்திருக்கிறது. 492-பக்கங்கள் கொண்டது.

இதன் விலை ரூபா 2—0—0.

கமலசேகரன்.

ஓர் சத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர் குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அநாதைப்போல அன்னியரால் வளர்க்கப்படுவதும் பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் அவனெதிரிற்றோன்றி அவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவி செய்வதும் மிக்க ஆச்சரியமாக விருக்கும்.

இதில் அதிசயரசமும், சோகரசமும், வீரரசமும் உண்மைக்காதலின் அபூர்வ குணங்களும் நிறைந்திருக்கின்றன. இதன் விலை ரூபா 1 12 0.

பூங்கோதை.

இது மிக்க ஆச்சரியத்தை விளைவிக்கும் ஒரு நாவல். குழந்தைப் பருவத்தில் ஜலத்தில் முழுகி இறந்துபோனதாகக் கருதப்பட்ட ஒருவன் பல வருடங்களுக்குப் பின் தோன்றி தன் தந்தையின் திரண்ட ஆஸ்தியைப் பெறுவதும் இடையில் அவனுக்கு நேரிடும் மிக்க ஆச்சரியமான சம்பவங்களும் வாசிப்போர் மனத்தைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்ளும். அவனுடைய உத்தம குணங்களும் நடக்கைகளும் வாலிபர்களுக்கு நல்ல போதனைகளை யளிக்கத்தக்கவை. கதாநாயகியாகிய பூங்கோதையின் கற்புள்ள நடக்கையும் பிதாபக்தியும் எல்லாப் பெண்களுக்கும் நற்புத்தி புகட்டும். இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

கற்கோட்டை.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம்காதலர் பொருட்டாய், எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச்சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக்கதையிலுள்ள முக்கிய விசேஷமாவது, இதிலுள்ள கதாபாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும், அவற்றின் பயன்களும், மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது. 564 பக்கங்கள்கொண்டது விலை ரூபா 2.

மஞ்சள் அறையின் மர்மம்.

இதுகாறும் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவேயிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்ந்திருக்கிறது. விலை ரூ. 1—8—0

தேவசுந்தரி.

இஃதோர் மகாப்பதிவிரதையின் அரிய சரித்திரமாகும், பதிவிரதைகளில் பல அளவுள்ளது. சிலருடைய பதிவிரதா தன்மை தன் கற்புத்தன்மையை மட்டுமே காப்பாற்றிக்கொள்ளும் இயல்புடையது. இவ்வித கற்புடையோர்க்கு புருஷத் தன்மைக் கொப்பாகிய தைரியமும் பொறுமையும், துணிகரமுமாகிய குணங்கள்வேண்டும். இதைப்போல் மிக்க சிலரே உண்டு. தேவசுந்தரிக்கு நேரிட்ட இக்கட்டைச் சகிக்க முடியாது. உலகை மறக்கத் தீயவழிகளிலிறங்கிய தன்புருஷனை ஆதரித்துக்கொண்டே எல்லா இக்கட்டுகளையும் சகித்துக்கொண்டு கற்பின் தன்மையை விளக்கினாள். இப்பெண்மணியின் சரிதை நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு கன்னிகையும் அகத்தியம் வாசித்து அறியவேண்டியது. இதன் விலை ரூபா 1 4 0

தினகரசுந்தரி.

இக்கதாநாயகி ஆண்வேடம் தரித்து தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய கோரச் செயலைக்கண்டு பிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதினும் இவள் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்துவிடுவது மிக்க வியப்பாயிருக்கும். இதன் விலை ரூபா 1.

சுவர்ணம்பாள்.

துப்பறிபவன் கதவிற்பட்டிருந்த ஒரு பெருவிரற்குறியின் அடையாளத்தைக்கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் அவனுடைய சூக்ஷ்ம அறிவும் சாமர்த்தியமும் நன்கு விளங்கும். பேராசையானது மிக்க பாபச்செயல்களையும் செய்யத் தூண்டக்கூடிய கொடிய குற்றமென்பதும் முடிவில் அதனால் அவமானமும் இராஜ தண்டனையும் கிடைக்கும் என்பதும் இன்னும் அநேக நீதிகளும் தெரியவரும். இதன் விலை அணா 12.

விலாசம்—ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

பவளத்தீவு அல்லது குடும்பசாபம்.

நமது மனமோகினி சஞ்சிகையில் பிரதி மாதமும்வெளியாகிக்கொண்டிருந்த மேற்படி நாவலின் முதற்பாகம் (நமது சந்தா நேயர்களின் கோரிக்கையின்படி) புத்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அனுபவிப்பதும், ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்ப முதல் முடிவு வரை வாசிட்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொண்டு மிக்க களிப்பை யளிக்கும். இதன் விலை ரூபா 1-6-0.

தபால் கொள்ளைக்காரர்கள்.

நமது 'ஆனந்தபோதினி'யில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டு வந்த இந்த நாவல் இப்போது புத்தகமாய் வெளி வந்துவிட்டது. கல்வியும், சூக்குமபுத்தியும் அதோடு செல்வமுமுடையவன் உள்ளுக்குள்ளாகவேயிருந்து தபாலில் வரும் விலையுயர்ந்த பொருள்களைக் களவாடுவது பெரும்பாலும் அநேகர் இதுவரையில் வாசித்திராத அதியாச்சரியமான களவாகவிருக்கும். துப்பறிபவன் பன்முறை பிராணாபத்தில் சிக்கி, அதிலும் இருமுறை மடிந்துபோனானென்றே கருதப்பட்டு, அக்களவு நடக்கும் மகா இரகசிய வழியையும் அதற்கு முன் நடந்த கொலையைப்பற்றிய உளவையும் அறிந்து கடைசியில் அக்கள்ளக்கூட்டத்தைப் பிடிப்பது மிக்க அதிசயத்தை யுண்டாக்கும். விலை அணா 14.

வீ ர நா த ன்.

தேவராஜனும் அவன் மனைவியும், காணாமற்போன குழந்தை சிக்கினது, மலைமேல் நடக்கும் அதிசயங்கள், வீரநாதனும் கன்னியும், இரண்டாவது கலியாணமுடிவு, மலைநாட்டு பாடசாலை பார்க்கத்தகுந்தது. சர்க்கரை தோட்டத்தில் கொண்டாட்டம், உபாத்தியாயர் ஜெகன்னாதன் வலையில் சிக்கிக்கொண்டான், கன்னியம்மாள் இரகசியமான இடங்களைக் கண்டுபிடித்தல், வீரநாதன் ஞானசேகர குருவையும் இராஜாம்பாளையும் காண்பது பெருமை, தேவராஜின் சாராயக்கடை அழிக்கப்படல், ஜானகி தாயார் தகுந்த சமயத்தில் பயமுறுத்தல், உள்ளேயே உளவாளி துரோகம், (விடாநகைப்பு) தெருவில் கலியாண ஏற்பாடு, தாலிகட்டுதல், உபாத்தியாயர் ஜெகன்னாதன் பிராணாபத்தால் தப்பித்தான். இதன் விலை அணா 12.

மின்சாரமாயவன்.

மின்சாரமாயவனும் பெரியண்ணனும், ஸார்ஜெண்ட் கமலநாதனுடைய பெருமை, சுந்தரபூபதி பிரபுவின் பணப்பெட்டிகள் களவாடப்படல், மின்சாரமாயவன் பிசாண்டிபுரம் பிரயாணம் போவது கவனிக்கத்தக்கது. இராஜாராம் வீடு பார்க்கத்தகுந்தது, தமக்கைக்கும் தம்பிக்கும் மனஸ்தாபம், பெண்களை கட்டில்லையர்து ஆண் பிள்ளைகளை விடுவதுபோல் விட்டுவிட்டுவதால் நேரிடும் விபரீதங்கள், வானூர் ஹோட்டலில் மின்சாரமாயவனுக்கும் கந்தனுக்கும் சண்டை போலீஸார் சிப்பவிகளின் பாளையத்திற்கு வருதல், கமலநாதன் மின்சாரமாயவனுக்கு அதிக சாமர்த்தியமாயிருந்தும் ஐக்கியப்படல் (அதிசயம்) ஜெயதேவியும் அவள் அத்தையும் இரத்தினபுரியில் உலாவுதல் அவ்விடம் வேடிக்கையான ஆபத்து ஆச்சரியமாயிருக்கும். இதன் விலை ரூபா 1 8 0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

குணசுந்தரன்.

தீயர்க்கள் சகவாசத்தால் தீமையே உண்டாகுமென்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது. கதாநாயகன் தன் நண்பனுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பதில் அவன் செய்யும் தந்திரமான தீங்குகள் ஆச்சரியத்தைக் கொடுக்கும். இதன் விலை அணா 12.

பத்மாசனி.

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், ஒரு பெண்பிள்ளை தன் சாமார்த்தியத்தாலும் தைரியத்தாலும் அக்கள்வர் எண்ணங்களை நிறைவேற வொட்டாமல் செய்வதும், அவர்களின் குற்றங்களைக் கண்டுபிடிக்க ருசுவுகள் கண்டுபிடிப்பதும், ஒரு நிரபராதிமேல் வந்த அபாண்டமான குற்றத்தை ருசுப்படுத்தி அவனைச் சிறைமீட்பதும் படிக்கப்படிக்க சந்தோஷத்தை விளைவிக்கும். இதன் விலை அணா 14.

கனகரத்தினம்.

நண்பர்காள்! இதற்கொப்பான நாவல் இதுவரையில் வெளி வந்திராதென்பது திண்ணம். இதில் சோகரசம் இத்தன்மையதென நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது. இதற்கு இணையான நாவல் கிடைக்காதென்பதை வாசிப்பவர்களே உணர்வார்கள். இதன் விலை அணா 8.

சகோதர வாஞ்சை அல்லது சம்பந்தமூர்த்தி.

சம்பந்தமூர்த்தி யென்னும் மூத்தவன் தன் அன்னையிடம் காட்டும் அன்பும். தன்மீது வீண்பழி சுமத்திய தன் தம்பியிடம் காட்டும் விசுவாசமும் கடைசியில் தன் அன்னையின் மனத்திருப்திக்காகத் தன் தம்பிசெய்த கொலைக்குற்றத்தைத் தான் ஏற்றுக்கொண்டு அவனை விடுவிக்கும் உதாரகுணமும் பின்னால் உண்மை வெளிப்பட்டபிறகு தாம் விரும்பியபெண்ணை மணம்புரிந்து சந்தோஷப்படுவதும் மகிழ்ச்சியையளிக்கும். விலை அணா 6.

ஸ்கோல் பதிப்பு விலை அணா 7.

நளினசுந்தரி அல்லது நாகரிக தடபுடல்.

பிரஹ்மஸ்ரீ சுப்பிரமணிய சிவம் அவர்கள் எழுதியது.

தேசாபிமானமும், ஜனாபிமானமும், மதாபிமானமும் நிறைந்து விளங்கும் நாவல். வீரத்தன்மையும் விசுவாசமும் மிகுந்த வீரணத் தேவனது நடவடிக்கைகள் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும். யானைக்காரன் மகம்மத்கானுடைய ராட்சதயுத்தம் ஆச்சரியமாயிருக்கும். நாகரிகர்களான நாராயணசாமி, நளினசுந்தரி இவர்களுடைய செயல்கள் காலத்திற்கேற்ற விஷயங்களுமாம். இதன் விலை அணா 10.

மதிசூதனன்.

இஃதோர் இனிய செந்தமிழ் நாவல். படிக்கப்படிக்கப் பரமானந்தத்தைத்தரும் விகடங்கள் குருசிஷ்ய தர்க்க பாவனையாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் கதா நாயகனுடைய சாமர்த்தியங்களெல்லாம் மிகவும் வேடிக்கையாக இருக்கும். கதாநாயகன் ஓர் தாசியை அவமானப்படுத்தி மீண்டும் அவளைக் காப்பாற்றுவதில் அவனுடைய வாஞ்சை மெச்சத்தக்கதா யிருக்கும். இதில் பஜாரிகளின் சரித்திரத்தை வாசிக்கும்போது அதிக ஆச்சரியமும் சந்தோஷமுமுண்டாகும். இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

மஹஸயாள் பகவதி.

இது, அடங்கா நகப்பை யுண்டாக்கும் ஓர் அற்புத தமிழ்க் கதை. இப்புத்தகத்தின் முதல் அத்தியாயத்தைப் படிக்க ஆரம்பித்தவுடன் உண்

டாகும் சிரிப்பு புத்தக முழுவதையும் படித்து முடித்த பின்னரும் கூட நெடுநோம் வரை அடங்காதிருக்கும். பேய் பிசாசு பில்லி சூனியம் முதலியவற்றின் விநோதங்களும், மாந்திரீகம், பேயாட்டு, கோடாங்கிக்கூத்து முதலிய ஜெக ஜால மாயா விநோதங்களும், அண்டப்புளுகர், வண்டிப்புளுகர், வாயின்புளுகர். முதலிய சண்டப்பிரசண்ட யுக சண்டமாருதக் கோடையிடிப் பெரும்புலித் திடீர்ப்புளுகராகிய பூசாரிகளின் மோசக் கூத்துக்களும், அவுட்டுச்சிரிப்பை யுண்டாக்கத் தக்க பல அற்புத விநோதங்களும், இதில் விரிவாகக் காணப்படும். இது வேடிக்கைப் புத்தகமாயினும் ஒவ்வொரு வகையிலும் விவேகத்தை யுண்டாக்கத் தக்கது. 247-பக்கங்கள் கொண்டது. இதன் விலை ரூபா 1.

இந்துலீகா.

கதைகளில் பலவிதங்கள் இருந்தபோதிலும் இக்காலத்திற்குத் தக்கபடி நமது இலௌகீக மதாசாரங்களை யொட்டி நம்மிடமுள்ள குறைகளை நீக்கி, நமக்கு அவசியமான சீர்திருத்தங்களை போதிக்கும் கதைகளே இக்காலத்தில் அவசியமாய் வேண்டியவைகள். அத்தகைய நாவல்களில் இது ஒன்று. இதில் வரதக்ஷிணை, ஆசாரசீர்திருத்தம், பெண்களுக்குவேண்டிய கல்வி முதலிய அவசியமான பல விஷயங்களடங்கி யிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இது பயனளிக்கத் தக்கதேயாகும். விலை அணு 8.

ஜீவகன்.

இது, புதிய முறையில், இப்போது வெளிவரும் இனிய நாவல்களைப் போல எழுதப் பெற்ற அரியதமிழ்க் கதை. பஞ்ச காவியங்களில் முதன்மை பெற்றதாகிய சீவகசிந்தாமணிக் கதையே இக்கதையாம் எவ்லாச் சரித்திரங்களினும் ஜீவகன் சரித்திரம் பெயர் பெற்ற தென்பதைக் கற்றோர் யாவருமுணர்வர். ஆயினும், சிந்தாமணி பழைய செய்யுட் காவியமாகவும் கடின வுரையோடு கூடியதாகவு மிருப்பதால் அதிலுள்ள இனிய கதையை யாவரும் படித்துணர்தல் அரிதாயிருந்து வந்தது. ஆதலின் அதைச் சுருக்கி எளிய நடையில் எழுதி வெளியிட்டிருக்கிறோம். இதன் விலை ரூபா 1.

அகட விகட விலாச விநோதக் கதை.

192 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை அணு 10.

அன்பர்காள்! நமது அகட விகட விலாச விநோதக்கதையின் விமரிசையான விகடபுத்தகத்தை ஒரு முறை வாசித்தால் மனதை வேறே விஷயங்களில் செல்லவிடாமல் கவர்ந்துகொள்ளும். அதிலுள்ள ஒவ்வொரு விகடமும் வாசிப்பவர் மனதிற்கு உற்சாகத்தைத் தருவதுடன் அருகிலிருந்து கேட்பவர்களுக்கு வயிறு குலுங்கும் படியாக சிரிப்பை விளைத்து ஓர்மித இன்பத்தைத் தரும். இதன் விலை அணு 10.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய
சரித்திரமும், உபதேசங்களும்.

இம் மகானுடைய அற்புத சரித்திரத்தையும் நித்திய ஞானோபதேச மொழிகளையும் தமிழில் ஒரு புத்தகமாக்கி வெளியிட்டால் தமிழ் நாட்டார்க்குப் பெரிதும் பயன்படுமென்று கருதி, அன்னிய பாஷைகளிலிருந்த அவற்றை, சிறந்த வித்வன்னரைக்கொண்டு மொழி பெயர்ப்பித்து, உயர்ந்த கடிதத்தில் பிழையின்றி அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றோம். இப்புத்தகத்தில் ஈசுவரபக்தி, ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம், குருவின் தன்மை, மதத்தினியல்பு, முமூட்சுக்களின் பேதங்கள், ஈசுவரப்பிரீதி, சாதுசங்கம், வைராக்கியம், ஞானத்திற்கிடையூறுகள், பெண்ணாசை, பொன்னாசை, அகங்காரம், ஆகாரம், நிஷ்டை, ஈசுவரகிருபை, சுயாநுபூதி நிலைமை, முத்தியின் தன்மை, கோட்பாடுகள், சித்தர்லக்ஷணம், சன்னியாசியின் லட்சியங்கள், மனிதர் வகுப்பு, கிருகஸ்தர்க்குரியபோதனை, சித்திகள், கர்மநியதி, முதலிய அநேக அரிய விஷயங்களும், இன்னும் பல சிறந்த உபதேசங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சிறு பிள்ளைகளுங் கூட ஆத்ம ஞானத்தை மனதில் உணரும்படி உலகத்தில் நடக்கும் சாதாரண விஷயத்தையே உதாரணங் காட்டித் தெளிவாக அது சொல்லப்பட்டிருக்கின்றது. எவரும் இவ்வுபதேசங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். ஒருவன் எளிதில் ஆத்மஞானத்தை அடைதற்கு இப்புத்தகமொன்றே போதும். இதனைப் படித்தால் இம்மை, மறுமை ஆகிய இரண்டிடத்தும் பெரிய நன்மையை அடையலாம். இது தமிழ் மக்களின் அதிஷ்ட வசத்தாலேயே இப்போது வெளிவந்துள்ளது. இப்புத்தகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய ஆப்டோன் படமும், சுவாமி விவேகாநந்தருடைய படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூபா 1 12 0.

மணவாளன்	...	...	அணு	3
பரசுராமன்	...	...	,,	3

பீஷ்ம விஜயம் விலை அணு 10.

கீர்த்தி சிங்கன் விலை அணு 8.

நந்திதேவர் திருவாய் மலர்ந்தருளிய

ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்.

சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த நம் முன்னோர்கள் மிகச் சிறந்த அநேக நூற்களை நமக்கு இம்மை மறுமைத் தருவனவாக அருளிச் செய்தனர். அவைகளை அறிந்து ஆயுள், செல்வம், புகழ் புத்திரக்களத்திராதி சம்பத்து, சீலம், பேரின்பமான இன்பங்களை பூரணமாக யாவர்களும் அறியும்படியாய் தெளிவாய் விளக்கி வெளிவந்திருக்கும் இந்த ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோலென்னும் புத்தகத்தின் பெருமை யாதெனில் சோதிடரை விரும்பா வண்ணம் தாம் தாமே ஜாதகம் கணிதம் பண்ணவும் ஒன்பது கிரகங்களையும் பன்னிரண்டு இராசிகளில் அடைத்து ஆட்சியுச்சம் இவைகளைக் கண்டு பலாபலன்சொல்லும் வல்லமையும் இராசியில் 1-2-3-4-5-6-7-கிருகங்கள் ஒன்றாகக் கூடியிருக்கினும் அல்லது இரண்டு மூன்று கிருகங்கள் சேர்ந்திருக்கினும் இன்னும் எவ்விதமாக மாறி மாறியிருக்கினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து கொள்ளலாம்.

இதன் விலை அணு 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167. மதராஸ்.

திருவிளையாடற்புராண வசனம்.

பதினெண்புராணங்களி லொன்றாகிய கந்தபுராணத்தில் சங்கரசங்கிதையில் சொல்லப்பட்ட திருவாலவாய் மகிமை என்கிற ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல் அறுபத்துநான்கையும் 68-படலங்களாக விருத்தச் செய்யுளில் ஸ்ரீ பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்திருக்க, அதை யாவரும் எளிதிலுணர்ந்து நற்பயனடையுமாறு துதிகளை யெல்லாம் விடாமல் அப்படியே செய்யுட்களாகவும், மற்ற கவிகளை செந்தமிழ் நடையில் எழுதி சமயாசாரிகள் நால்வரின் திருவுருவப்படமும், இன்னும் 64 ஐதிகப்படங்களும் சேர்த்து சுத்தப்பிரதியாய் அச்சிட்டிருக்கிறது. கடவுளின் திருவிளையாடல்களையும், மகிமைகளையும், தத்துவங்களையும், அவதார விஷயங்களையும், அறிய விரும்புவோர் வாசிக்கவேண்டியதவசியம். இதன் விலை ரூபா 2—8—0.

விக்கிரமாதித்தன் கதை.

இது பூர்வத்தில் மகா பிரக்யாதிபெற்று, நவரத்தின கசிதமான முப்பத்திரண்டு பதுமைகள் சூழ்ந்த சிம்மாதனத்தில் வேதாளத்தையே வாகனமாகக்கொண்டு 2000-வருடங்கள் அரசியற்றி அற்புத லீலைகள் புரிந்த விக்கிரமாதித்தன் என்னும் சக்கிரவர்த்தியின் பிரபாவங்களை அம்மன்னனுக்குப்பின்னால் அரசியற்றிய வீர, சூர, தீர, பராக்கிரமசாலியாகிய போஜமகாராஜனுக்கு, விநோதரஞ்சிதம், மதனாபிஷேகம், சோமனவல்லி, மங்களகல்யாணி, மந்திரமனோன்மணி, சிங்காரமோகனவல்லி, பரிமளமோகினி கிருபாபரிபூரணி முதலிய 32-பதுமைகள் சொல்லிய அருமையான ஆச்சரியக்கதை.

இதேமாதிரியான பெரிய யெழுத்தில் அச்சிட்ட சுத்தமான பதிப்பு லெத்தகிராப் படங்களுடன் யிருக்கிறது. ரப் விலை ரூபா 1 4 0, ஷை திக்கு காகிதம் காலிகோ பயிண்டு ரூபா 2 0 0

அருணாசலபுராணம்.

பஞ்சபூதத்தலத்துளொன்றாகிய திரு அண்ணாமலையின் மான்மியமடங்கிய 14-சருக்கங்கள்கொண்ட அருணாசலபுராணம் மூலமும் உரையும் 20 ஐதீக திருவுருவப்படங்களுடன் வெளியாக்கப்பட்டிருக்கிறது. இதில் சமயாசாரிகளின் தேவார திருவெம்பாவைகளும் கிரிப்பிரதட்சண விதிகளும், கார்த்திகைதீபச் சிறப்பும், குருநமச்சிவாயர் சரித்திரமும் அவர் அருளிச்செய்த அருணகிரியந்தாதி, அண்ணாமலை வெண்பா முதலியவைகளுடன் திருவருணையந்தாதி, திருவருணைக்கலம்பகம், சோணசைலமாலை, சோணாசலவெண்பா, உண்ணாமலையம்மன் பதிகம், சதகம் முதலியன சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1—8—0.

குசேலோபாக்கியான வசனம்.

இதில் குசேலர் மேல்கடலடைந்தது, வடமதுரை சிறப்பு, கடைவீதியின் சிறப்பு, அவந்திக்கடுத்த மலையுச்சியிலுள்ள பிராமணச் சேரியின் சிறப்பு, குசேலர் திருமணம், குசேலர் துவாரகை சேர்தல், ஸ்ரீகண்ணனுடைய அந்தப் புறத்தின் சிறப்பு, கிருஷ்ணன் குசேலர் கொண்டுபோன அவலை வாங்கி உண்ணுதல், ஒருபிடி அவலுக்குமேல் உண்ணலாகாதென்று உருக்குமணி கிருஷ்ணனைத் தடுத்தல், குசேலர் செல்வம் வந்து வைகுந்தமடைந்தது, குசேலரை அவர் மனைவி உபசரித்து கொண்டாடுதல், குசேலர் விஷ்ணுவைத் தோத்திரஞ் செய்தல் முதலியவை யடங்கியது. விலை ரூ. 1

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி	ருத்ரோத்காரி ஹு கார்த்திகை மீ கஉ	பகுதி
9	1923 ஹு நவம்பர் மீ 16உ	5

கடவுள் வணக்கம்.

நித்தியமாய் நின்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம். (1)

யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி
யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி யன்பருக்கே
பேரா னந்தக்
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்னைக்
கொடுத்துக் காட்டுந்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம். (2)

—

ரேசிக்குஞ் சிந்தை நினைவுக்கு ளுன்னைவைத்துப்
பூசிக்குந் தானிறைந்து பூரணமா—யோசித்து
நின்றதல்லான் மோன நிருவிகற்ப நிட்டைநிலை
யென்றுவரு மோவறி யேனே. (3)

—

அறிவி லறியாமை யற்றறிவாய் நின்று
பிறிவறவா னந்தமயம் பெற்றுக்—குறியவிழ்ந்தா
லன்றைக் குடல்வேண்டே னையாவிவ் வாக்கையையே
யென்றைக்கும் வேண்டுவேனே யான். (4)

அரும்பொருள் விளக்கம்.

1. நித்தியமாய்=என்றைக்குமுள்ளதாய்

நிராமயமாய்=நோயற்றதாய்

ஆரமுமாய்ச் சமீபமுமாய் = தேகமே நாம் என்ற புத்தியோடு மனதின் வயப்பட்டு விஷயாதிகளில் உழன்றுகொண்டிருக்கும் அஞ்ஞானிகளுக்கு எட்டாது தூரமாகவும், ஆன்ம சொரூபமுணர்ந்த ஞானிகளுக்கு அனன்னியமா யிருத்தலால் சமீபமாகவும்

எல்லாம் வைத்திருந்த தாரகமாய்=அண்டாண்ட சராசரங்கள் யாவற்றிற்கும் ஆதாரமான இடமாய்

மனவாக்கெட்டா=மனதால் சுட்டியுணரப் படாததும், வாக்கால் இத்தன்மையது, இவ்வுருவுடையது, இக்குறியுடையது என்று வரையறுத்துக் கூறொணாததும்

சுகாரம்பப் பெருவெளி=சதா ஆனந்தோதயமான பரவெளி; அதாவது தெவிட்டாததும் முடிவில்லாததுமான ஆனந்தசொரூபம்.

2. "யாது மன நினையும் அந்த நினைவுக்கு நினைவாகி"—மனமே எதையும் நினைப்பது. ஆனால் மனம் ஜடம். அந்த நினைவிற்கு ஆதாரமாய் ஈசுவரன் சக்தியிருத்தலினாலே மனம் நினைக்கும் சக்தியுடையதாகிறது. ஆன்மா அச்சக்தியைத் தன்னில் அபேதமானதாக உணர்ந்து மனதை எதிரிட்டு நோக்கின் மனம் இல்லாமற் போம். ஆதலின் 'மனதின் நினைவிற்கு நினைவாக இருப்பது' என்றார்.

யாதின்பாலும் பேதமறநின்று=(சூரியன் சிறிது பெரிது, சுத்தம் அசுத்தம் என்ற ஒரு வித்தியாசமுமின்றி உலகிலுள்ள சகல வஸ்துக்களின் மேலும் தனது பிரகாசத்தை வீசுவதுபோல்) யாதொரு வித்தியாசமின்றி சராசரமெங்கும் கலந்து நின்று

உயிருக்குயிராகி=ஜீவசாட்சியாய்

குணங்குறியொன்றற=நாமரூப முதலிய எத்தகைய வரம்புமின்றி

தன்னைக்கொடுத்துக்காட்டும்=நம்மைத் தானாக்கிக்கொண்டு பிரகாசிக்கும்

3. சிந்தை நினைவுக்குள்=மனம் தன் எண்ணத்தில்

உன்னை வைத்துப்பூசிக்கும்=உன்னைத் தனக்கு அன்னியமான ஒரு பொருளாகவைத்துப் பூசைசெய்யும்.

தான் நிறைந்து பூரணமாய்=தான் (ஒடுங்காமல்) வியாபகமாய் நிறைந்து

யோசித்து நின்றதலால்=ஒன்றைச் சிந்தித்து இருந்ததேயன்றி

நிருவிகற்ப நிட்டைநிலை யென்று வருமோ=நிருவிகற்ப சமாதி (நிட்டை இல்லையாதலின் அது) எப்போது வருமோ

மனமானது ஈசுவரனைத் தனக்கு அன்னியமாக (முன்னிலையில்) வைத்துச் சிந்திக்கும் வரையில் தான் வியாபகமாகவே யிருக்கிறது. ஒருவன் அவ்வாறு பகவானை யன்னியமாகக் கருதும் வரையில் அவன் பகவானது உண்மைச் சொரூபத்தை யறிந்தவனாகான். இதில் ஆனந்தம் ஜனியாது. ஆகையால் தன்னையறிந்து, தலைவனிற் கலந்து தன்மை முன்னிலையற்ற அகண்டாகார நிலையை யடைவதாகிய நிருவிகற்ப நிட்டை என்று வருமோ வென்றார்.

4. அறிவில் அறியாமை யற்று=சகல கேவலங்கள் நீங்கி

அறிவாய்=ஞான சொரூபமாய்

பிறிவற=இரண்டின்றி ஏகமாய்

குறியவிழ்ந்தால்=தற்போத மொழிந்த பூரண ஞானானுபவம் பெற்றால் பிறகு தேகம் வேண்டுவதில்லை. அதுவரையில் தேகம் வேண்டுவதே. ஏனெனில் தேகத்திலிருந்தே ஞான மடைவதாகிய காரியத்தைச் சாதிக்கவேண்டும். ஆதலின் ஞானம் கைவருமுன் வீணே யுடலை வெறுத்து அதற்கு ஆகாரமளிக்காது துன்புறுத்தலாகாது என்பதாம்.

ஆனந்தபோதினி

உருத்ரோத்காரிஷு கார்த்திகைமீ

தீங்குக்கும் துட்டு கொடுத்து வாங்குவதா.

உலகில் மக்கள் தங்களுக்கு நன்மையளிக்கும் வஸ்துக்களையும், கல்வி, நடவடிக்கை, ஆசாரம், நட்பு முதலியவைகளையும் தேக சிரமமும் பணமும் செலவு செய்தேனும் அடைய முயல்வது சுபாவம். ஆயினும் சில சமயங்களில் மனிதர் தெரிந்தும் தெரியாமலும் தீங்குக்கே துட்டுகொடுத்து வாங்குகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் ஒரு விஷயம் தீங்கென்று தெரிந்தே அதற்குப் பணத்தைச் செலவழிக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் கௌரவமென்றும், நாகரீகமென்றும், வேடிக்கைக் காலப்போக்கென்றும் கருதி அவ்வழிகளில் பணத்தைச் செலவுசெய்து, வீண்விரையம், சுகவீனம், வியாதி, துராசாரம் இத்தகைய தீங்குகளுக்குள்ளாவதோடு, தம் மக்களுக்கும் துராசாரம் துர்நடக்கை முதலியவற்றை விலைகொடுத்து வாங்கி யளிக்கிறார்கள். இந்த வியாபாரம் இப்

போது நமது பாரத பூமியில் ஏராளமாகவும் தாராளமாகவும் நடைபெறுகிறது.

மநு நீதிப்படி அரசன் தன் குடிகளைக் கள்ளர், பகைவர், தீ, தன் பரிவாரம் முதலியவர்களால் நேரிடக்கூடிய தீங்கிலிருந்தும் காப்பாற்றுவதோடு, அவர்கள் தரித்திரம், துர்நடக்கை, துராசாரம் முதலியவற்றை யடையாவண்ணமும் காப்பாற்றவேண்டிய கடமையுடையவன். தற்காலம் நமது பாரதபூமியில் நடைபெறும் துரைத்தனமோ மனிதனுடைய சுதந்தரத்தை முக்கியமானதாகக் கருதுவதாய்க் கூறப்படுகிறது. ஏனெனில் ஆளும் ஜாதியாராகிய ஆங்கிலர்கள் சுதந்தரத்தை யாவற்றினும் சிறந்ததாகக் கருதுகிறவர்கள். அதற்கென்னமோ ஐயமில்லை.

சுதந்தரமென்றால் ஒரு மனிதன் தன் மனோபாவத்தை உள்ளபடி பகிரங்கமாய் வெளியிடவும், தன்னைச் சேர்ந்த விஷயங்களில் தன் பிரியம்போல் நடக்கவும், தனக்குப் பிரியமில்லாததைச் செய்யாதிருக்கவும் சுயாதீன முடையவனாக விருத்தலேயாகும். இக்காரணத்தின்படி, தனி மனிதன் தன் தேகசுகத்துக்கென்றோ சந்தோஷத்திற்கென்றோ தன்வரையில் ஒரு காரியத்தைச் செய்தால் அவனைத் தடுத்தல் அவன் சுயாதீனத்திற்கு இடையூறு செய்ததாகும் என்ற கருத்தால் நம் துரைத்தனத்தார் அதில் பிரவேசிப்பதில்லை.

உலகிலுள்ள பல நாடுகளிலிருக்கும் சுயாதீனத்திற்கும் ஆபூர் நாடாகிய நம் பாரதபூமிவாசிகளால் அனுபவிக்கப்படும் சுயாதீனத்திற்கும் மிக்க வித்தியாசமிருக்கிறது. மனச்சாக்ஷிக்கு எது மெய்யான சுயாதீனம் என்று தோன்றுகிறதோ அச்சுயாதீனம் நம் நாட்டில் முயற்கொம்பே. இக்கலியுகத்தில் எல்லாம் ஆச்சரியமாகவே நேர்வதுபோல் நமது சுயாதீனமும் மிக வியப்பானதே. நமக்கிருக்கும் சுயாதீனத்தால்,

1. நாம் இஷ்டப்படி, நாட்டுச்சாராயம் குடித்தால்—கொஞ்சம் குறைந்த செலவு—சீக்கிரம் பணம் குறையாது ஆதலின்—சீமைச்சாராயம் தினம் குடித்து போட்டி போட்டுக்கொண்டு ஓட்டாண்டியாகலாம்.

2. நமது சிறுவர்கள் 5 வயது முதலே ஸிகாரெட், பீடி பிடிக்கத் தொடங்கி பலங் குன்றி வியாதியுற்று நடுவயதைக் காணாமலே ஒழியலாம்.

3. நமக்கு வருமானம் மற்ற எல்லா நாட்டாரைவிட மிகக் குறைவாயினும் ஊண் உடைகளில் வெளியாடம்பரத்தில் மயங்கி அளவுமீறிச் செலவு செய்து சதா கடனில் முழுகி நெஞ்சு கலங்கி நசிந்தொழியலாம்.

4. தீமைக்கு விலைகொடுத்துத் தாராளமாக வாங்கலாம்.

அவ்வாறு திருட்டாந்தங்களில் சிலவற்றை யீண்டு கூறுகிறோம்.

1-வது காபி கிளப்புகள் என்ற சிற்றுண்டி கடைகள். இக்கடைகள் பெரும்பாலும் பிராம்மணர்களாலேயே நடத்தப்படுகின்றன. அதனால் சகல ஜாதியாரும் அங்கு செல்கிறார்கள். அங்கு ஆசாரம் அடியோடு கெடுவதோடு, ஒரே பீங்கான் பாத்திரத்தில் சகலரும் சாப்பிடுவதால் கொடிய தொத்துவியாதிகள் சுலபமாகப் பரவுகின்றன என்று பிரசித்திபெற்ற வைத்தியர்கள் காரணங்களோடு விவரமாகப் பத்திரிகைகளில் பன்முறை வரைந்திருக்கின்றனர். முற்காலத்தில் நமது நாட்டார் காலையில் பழைய அன்னம் மோர், பிறகு பகற்போது ஒரு உணவு, இரவு ஒரு உணவு, இவ்வளவே உண்டு கொண்டிருந்தார்கள். எங்கோ சிலர் பிற்பகல் 3 மணிக்குக் கொஞ்சம் சிற்றுண்டி யருந்துவார்கள். அவர்கள் சுக தேகிகளாகவும், பூரண ஆயுளுடையவர்களாகவும் இருந்தார்கள். அப்போது மஹம்மாரி (பேதி) வியாதி அருமையாய் எப்போதோ ஒரு காலத்தில் வரும். அறுபது வருடத்திற்கொருமுறை வரும் என்று வயோதிகர் கூறக் கேட்டிருக்கிறோம்.

இப்போது காபி கிளப்புகள் உண்டானபின் மிக்க ஏழைகள் கூட அங்குசென்று ஒருவேளை சிற்றுண்டிக்கு ஆறணா அரைரூபாய் கூட செலவழிக்கிறார்கள். தன் குடும்பத்தைச் சேர்ந்த அனைவர்க்கும் ஒருவேளைச் சாதாரண போஜனத்திற்குப் போதுமான பணத்தைத் தன் ஒருவேளை சிற்றுண்டிக்கு அளித்துவிடுகிறான். அதோடு நமது நாட்டின் உஷ்ண நிலைமைக்கு ஒவ்வாத காபி தேயிலைப் பானங்களை யருந்தி வியாதியை விலைக்கு வாங்கிக்கொள்கிறான். ஹோட்டல் முதலாளி பணம் சம்பாதிக்கிறார். அவரிடம் ஐந்தாறுபேர் வேலைசெய்து சீவிக்கிறார்கள். ஆனால் பல்லாயிரம் பேர் அனாவசியமாகப் பணவிரயம் செய்து தங்கள் ஆசாரத்தையும் தேகசுகத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

2-வது நாடகங்கள்: இதில் நேரிடும் பணச்செலவு பின்னும் வீணானது. கெடுதியும் அதிகம். இதில் அனுபவிக்கப்படுவது இங்

திரியசுகம். இதனால் விளையும் தீங்கு மிகக் கொடியது. இக்காலத்தில் நடக்கும் நாடகங்கள் ஆடவர்கள், முக்கியமாய் வாலிபர்கள் மாதர்களின் மனங்களைத் தீயவழியில் திருப்பக் கூடியவைகளேயென்பது யாவரு மறிந்த உண்மை. எங்கோ ஒவ்வொரு நாடகம் பக்தியையோ நீதியையோ புகட்டத் தக்கதாயிருக்கின்றது. அவற்றிலும் தாழ்ந்த உணர்ச்சிகளை யுண்டாக்கத்தக்க பாட்டுகளும் காட்சிகளும் இல்லாமலில்லை.

3-வது பயாஸ்கோப் படக்காட்சி. இவற்றில் விசேஷமாய் மேல்நாட்டு ஆசாரங்களும், அங்கு நடக்கும் சம்பவங்களுமே காட்டப்படுகின்றன. மேல்நாட்டு நாவல்கள் என்ற கதைகளின் காட்சிகள் இவற்றில் காட்டப்படுகின்றன. அக்கதைகளையெழுதும் நூலாசிரியர்கள் அவற்றிலுள்ள கெட்ட நடக்கைகளைக் கண்டித்தெழுதுகிறார்கள். அதனால் அவை கெட்டவையென்றுணர்ந்து அவற்றை நிக்கிரகம் செய்யவேண்டுமென்று வாசிப்போர் உணரலாகும். இப்படக்காட்சிகளிலோ சுருக்கமாய் நடந்த சம்பவங்கள்மட்டும் காட்டப்படுகின்றன.

மேல்நாட்டில் இருக்கும் கள்ளர்கள் சாத்திர யுக்தமாக, எந்திரங்கள், மின்சாரசக்தி, முதலியவற்றின் உதவியைக்கொண்டு மிக்க தந்திர சாமர்த்தியமாகக் களவு, கொலை, கள்ள நாணயம் செய்தல், பொய்ப்பத்திரம் பிறப்பித்தல் முதலிய குற்றங்களைச் செய்வதில் மிக்க சமர்த்தர்கள். போலீஸாரையும் துப்பறியும் நிபுணர்களையும் ஏமாற்றுவதில் கைதேர்ந்தவர்கள். இவர்கள் நடக்கைகளும், நமது மதம் ஆசாரம் இவற்றின்படி கற்பற்றவையும், ஆசாரவீனமானவையுமாகிய சம்பவங்களும் இப்படக் காட்சிகளில் காட்டப்படுகின்றன. நம் நாட்டிலுள்ள கூலி வேலை செய்யும் ஏழைகள்கூட மாலை 3 மணி நேரம் அக் காட்சிகளைக் காண 2 அணா முதல் 8 அணா வரையில் செலவழிக்கிறார்கள். "நாம் தரித்திரத்தில் ஆழ்ந்து கிடக்கிறோம். இது அனாவசியமான வீண் செலவு" என்று அவர்கள் அறிவார்களேனும் இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் காட்சி யிவர்களை மயக்கியிழுக்கின்றது. வருடம் 360 நாட்களும் தினம் ஒருமுறைக்கிருமுறை இக்காட்சிகள் காட்டப்படுகின்றன. இதிலும் ஒரு முதலாளி இலாபம் பெறுவதும் சுமார் ஏழெட்டுபேர் ஜீவனம் செய்வதும் நடக்கிறது. ஆனால் நாட்டிலுள்ள அயோக்கியர்கள் தந்திர சாமார்த்தியத்

தோடு களவு முதலிய குற்றங்களைச் செய்ய நன்றாய்க் கற்றுக்கொள்ளுகிறார்கள். தற்காலம் சென்னையில் நடக்கும் அபூர்வக் குற்றங்களே இதற்கு அத்தாட்சியாகப் போதும். அனேகம் ஏழைகள் கடனிலும் தரித்திரத்திலும் அமிழ்ந்தழிகிறார்கள். ஆனால் ஒரு வழியில் இலாபம் இருக்கிறது. அதாவது மேல்நாட்டு இரசாயன மருந்துகளும் எந்திரங்கள் முதலிய கருவிகளும் கோடிக்கணக்கான பவுனுக்குச் செலவாகின்றன. அங்குள்ள படம்பிடிக்கும் தொழிற்சாலைகள் நல்ல பணம் குவிக்கின்றன.

இவற்றை நகர சங்கத்தாரேனும் கவனிக்கிறார்களா? துரைத்தனத்தார் வருமான வரிவந்தால் போதுமென்றிருக்கிறார்கள் போலும். துரைத்தனத்தார் இவற்றைக் கவனியாதிருந்தாலும் நகரபரிபாலன சபை, மந்திராலோசனை சபை முதலிய விடங்களில் அவயவிகளாகச் சென்று ஜனங்களின் க்ஷேமத்தைக் கவனிக்கும் நம்மவர்களன்றோ இத்தகைய தீங்குகளைத் தடுக்கவேண்டும். ஜனங்கள் இவ்வாறு அநாவசியமான வழிகளில் பணவிரையம் செய்து சுகத்தையும், நடக்கையையும், ஆசாரம் முதலியவற்றையும் கெடுத்துக் கொள்வதைத் தடுக்கமுயலாமல் மற்ற விவகாரங்களைமட்டும் கவனிப்பது ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரத்தைப் பெருச்சாளிகள் அறுத்துக் கொண்டு போவதைத் தடுக்காமல் அக்கட்டிடத்தின் மேல்மாடிச் சுவருக்குச் சித்திரம் தீட்டுவதுபோல் இருக்கிற தன்றி வேறில்லை. செல்வம் மலிந்து சந்தோஷத்தி லிருப்பவர்கள் கேளிக்கைகளில் காலங் கழிப்பது இயற்கையே. தரித்திரத்திலும் கடனிலும் திண்டாடிக்கொண்டு சரியான ஆகாரத்திற்கே தாளம் போடும் நமக்கு வாரத்திற்கு ஒருமுறை கேளிக்கையென்றேனும் வரையறுக்க லாகாதா?

பொது நலத்திற்காக அவயவிகளாய்ச் செல்லும் நம்மவர்கள் இது விஷயத்தில் சிரத்தை யெடுத்துக் கொண்டு ஜனங்களின் தீங்கைத்தடுக்க முயல்வார்களாயின் நாட்டிற்கு உண்மையான ஒரு பெரிய நன்மையைச் செய்தவர்களாகப் புண்ணியமும் புகழும் பெறுவார்கள். பரம்பொருளாகிய பகவானை அவர்களைத் தூண்டப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத்ஸத்.

வாலிபப்பருவம் பயங்கரமான காலம்.

உலகப்பிரசித்தி வாய்ந்த ஹாவ்லாக் எல்லிஸ் (Havelock Ellis) சமீபத்தில் தாம் எழுதிய ஒப்புயர்வற்ற "ஆண்பெண் மக்களின் தத்துவம்" (Psychology of sex) என்ற நூலில் "மதசம்பந்தமாக நாம் செய்யவேண்டிய ஆராய்ச்சிகளையெல்லாம் செய்துவிட்டோம். இனி ஆண்பெண் மக்களின் தத்துவசம்பந்தமாகத் தான் நாம் ஆராய்ச்சிகள் செய்யவேண்டும்" என்று கூறினார். இக்கூற்றின் உண்மையை நாம் உணர்ந்துகொள்வது அருமையல்ல. ஆறுபாகங்களாகப் பிரிக்கப்பட்ட அவர் எழுதிய அருமைமிக்க நூலைப் படித்தபோது ஆண்பெண் சம்பந்தமான எவ்வளவோ புதிய உண்மைகளை நாம் உணர்ந்துகொண்டோம். மகாத்மா காந்தியால் மிகப் பெரியவரென்று பாராட்டப்படும் எட்வர்ட் கார்பெண்டர் (Edward Carpenter) எல்லிஸ் எழுதிய சிறந்த நூலை மிகவும் புகழ்ந்தெழுதுகிறார். நம் வாழ்க்கையின் நடுச்சக்கரமாயிருப்பது ஆண்பெண்விஷயமே என்பதை அறியாதாரில்லை. உலகத்தின் இன்பதுன்பத்திற்கும் அதுவே காரணமாம். இம்முக்கியமான விஷயத்தைப்பற்றிய உண்மைகள் பெரும்பான்மையோர்க்குத் தெரியா. அவ்வுண்மைகளையெல்லாம் இச்சிறு கட்டுரையில் கூறுவது சாத்தியமாகுமா? அல்லாமலும் அவ்வுண்மைகளெல்லாம் பத்திரிகையில் வெளிப்படுத்தக்கூடியனவுமல்ல. மிஸ்டர் எல்லிஸ் தம் புத்தகத்தை அமெரிக்காவில் முதன்முதல் வெளிப்படுத்தியபோது அது இங்கிலாந்துக்கு வரக்கூடாதென்று தடுக்கப்பட்டது. ஆயினும் உலகநன்மையைக் குறித்து நாற்பது ஐம்பது வருடங்களாக அரும்பாடுபட்டு எழுதிய அப்புத்தகத்தைத் தம் நாட்டில் வரக்கூடாதென்று தடுத்த குற்றத்தை ஆங்கிலேயர் பின்னர் உணர்ந்துகொண்டு அந் நிபந்தனையை நீக்கிவிட்டனர்.

இந்தப் புத்தகத்தில் அவர் மிகவும் பயங்கரமான உண்மைகளைக் கூறுகிறார். அவ்வுண்மைகளையெல்லாம் திரட்டிக்கூற இங்கு இடமில்லாமை பற்றி யாம் வருந்துகிறோம்.

ஓர் ஆண்மகன் பதினான்குவயதடையும் வரையில் அவன் ஆணுமல்ல பெண்ணுமல்ல. இங்ஙனமாதலாலேதான் பதினான்கு வயதுக்குக்குறைந்த ஆண்பிள்ளைகளைப் பெண்ணை நேசிப்பதுபோலவே நாம் நேசிக்கின்றோம். ஓர் ஆண் மகனுக்குப் பதினான்கென்ற பருவம் மிக்க பயங்கரமானது. இத்தப்பருவத்திலிருந்துதான் அவன்பிற்காலவாழ்வு ஆரம்பமாகிறது. இந்தப் பருவத்தில்தானே அநேக பையன்கள் கெட்டுவிடுகிறார்களென்று எல்லிஸ் கூறுகிறார். இக்கேட்டிற்கு அநேக காரணங்களுள்ளனவென்றாலும் அவற்றுள் ஓர் பணிப்பெண் (ஆயா) ணைக்கொண்டு பையனை வளர்ப்பதும் ஒன்றாகுமென்று உடற்கூற்று நூல்வல்லார் சொல்லுகிறார். இந்தப் பணிப்பெண் பையன் கோபமாயிருக்கும்போது, அவன் கோபந் தணியவேண்டி அவனுக்கு ஒருவிதமான இன்பத்தை ஊட்டுகிறாளாம். பணிப்பெண்ணை வைத்துக் குழந்தைகளை வளர்ப்பது அநேகமாய் நம் இந்தியர்களிடத்

தில்லை. இதைத் தப்பினும் பள்ளிக்கூடத்தில் இன்னொரு கண்டமிருக்கின்றதென்று அவர் மொழிகிறார். இந்தக்கண்டத்தைத் தப்புவதுதான் மிகவும் அரிது. இவர் உலகத்தின் பல பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலுமுள்ள பையன்களின் உண்மைகளையெல்லாம் அறிந்து வெளியிடுகிறார். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் ஒழுக்கங்கெடாமலிருக்கும் பிள்ளைகள் நூற்றுக்கு எட்டு ஒன்பது தேறுவதும் அருமையாம். பன்னிரண்டு வயதிலிருந்தே இப்பையன்கள் கெட்டுவிடுகிறார்கள். பெரிய பையன்களும் சிறுவர்களும் அடிக்கடியும் ஒருங்கு கூடியிருப்பது பள்ளிக்கூடங்களில் சாதாரணம். அப்போது பெரிய பையன்களாயுள்ளவர்கள் சிறியவர்களைக் கெடுத்துவிடுகிறார்களாம். இவர்களுக்கெல்லாம் தாங்கள் செய்வது இன்னதென்றே தெரியாது. தங்கள் பிற்கால வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரமாயிருப்பது விந்து (Semen) என்ற உயிர்ப்பொருள். இதற்கு உயிர்ப்பொருள் (Life fluid) என்றும் பெயர். தேக பலத்திற்கு முக்கிய ஆதாரமாயிருப்பது இவ்வுயிர்ப் பொருளென்பதைச் சிறுவர்களுக்குப் போதிப்பது குற்றமாகாது என்று அநேக அறிஞர் அபிப்பிராயப்படுகின்றனர்.

சிறுவர்கள் அழிவிற்குக் காரணம் தற்கால நாகரிகமென்று சொல்வது குற்றமாகாது. பிரமசர்யத்தின் பெருமையும் குணமும் இக்காலத்தில் பெரும்பாலோர்க்குத் தெரியாமற் போயின. நம் ஆன்றோர் பிரமசர்ய ஒழுக்கத்தை மிகவும் வற்புறுத்தினர். ஒவ்வோர் இளைஞரும் இவ்வொழுக்கத்தை அநுசரிக்கக் கடமைபட்டிருந்தனர். சிற்றின்பத்திற்கு ஏதுவான விஷயானுபவங்களிலிருந்து அவர்கள் காக்கப்பட்டனர். பிரமசர்யத்தை அநுட்டிப்பதால் உண்டாகும் பிற்காலநன்மைகளையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். கல்வி கற்பதைக்காட்டினும் பிரமசர்யத்தின் உண்மைகளை உணர்ந்துகொள்ளலே சிறந்ததென அவர்கள் கொண்டுவந்தனர். அவர்கள் பெற்றோர்களும் அவர்கள் பிற்கால வாழ்வில் கண்ணுங்கருத்துமாயிருந்துவந்தனர். இவர்களுக்குக் கல்விபோதிக்கும் குருவும் இவர்களிடத்துத் தந்தையை யொத்த பரிவுடையவரா யிருந்தனர். இக்காரணத்தால்தான் அக்காலத்தில் ஆசிரியர் ஐங்குரவருள் ஒருவராக மதிக்கப்பட்டனர். பிரமசர்யத்தை அனுட்டிக்கும் பிள்ளைகள் பெரும்பாலும் மனிதசஞ்சாரமில்லாத காட்டிலே தம் ஆசிரியரோடு சென்று தங்கள் பிரமசர்ய பருவம் முடிந்து கல்வித்துறையில் சிறக்குங்காறும் அங்கிருந்து "என்ன நோன்பு நோற்றான் கொலோ இவனைப்பெற்ற வயிறுடையாள்" என்று கண்டவரெல்லாம் பாராட்டும்படியான இளஞ்சிங்கங்களாய் வளர்ந்து கிருகஸ்தாஸ்ரமத்தை மேற்கொள்வர். தற்கால நாகரிகம் அவ்வொழுக்கத்தை அடியோடு கவிழ்த்துவிட்டது.

நாகரிகமடைந்த தேசங்களில் அமெரிக்கா மிகவும் உயர்ந்திருக்கின்றதென்பதை மறுப்பாரில்லை. அங்குள்ள இளைஞரைப்பற்றி வால்ட் விட்

மான் (Walt Whitman) என்பவர் பின் வருமாறு கூறுகிறார்: "இங்குள்ள பிள்ளைகள் வீரமில்லாமல் இளவயதிலேயே முகம் வெளுத்துத் தலை நரைத்து முதுகு வளைந்து நரம்புந்தோலுமாய் 90 வயதடைந்த கிழவர்களைப் போல் நடைப்பிணமாய்ச் சுடுகாட்டை நோக்கி நிற்பவர்களா யிருக்கிறார்கள். இவர்கள் நிலை மிகவும் பரிதபிக்கக் கூடியது." இங்கிலாந்து முதலிய நாடுகளிலுள்ள பிள்ளைகளைப்பற்றியும் இங்ஙனேதான் ஹாவ்லாக் எல்லிஸ் முதலிய அறிஞர் கூறுகின்றார். இவ்வுண்மைகளையெல்லாம் பரியாலோசிக்குங்காலத்தில் தற்கால நாகரிகமானது உலகத்தின் புரைநோயாயிருக்கின்றதென்பது செவ்விதின் விளங்கும். "நாகரிகமும் அதுவந்தவாறும் அதனை நீக்கும் வழியும்" (Civilization, Its cause & cure) என்ற அருமை மிக்க நூலில் எட்வர்ட் கார்ப்பெண்டர் இப்போலி நாகரிகத்தின் தன்மைகளை யெல்லாம் எடுத்துக்கூறுகிறார்.

வாலிபர்கள் அழிவதற்கு இன்னும் எத்தனையோ வழிகள் உண்டு. பெண் ஆண் இன்பம் இன்னதென்று தெரியாமலே இளமைப்பருவமானது கழியவேண்டுமென்று எல்லா அறிஞர்களும் வயித்திய நிபுணர்களும் தேக தத்துவ நூலாரும் கூறுகிறார்கள. இந்தவிதமாகத் தம் பிள்ளைகளைக் காக்க வேண்டியகடமைகளைப் பெற்றோர்களும் அப்பிள்ளைகளைக்காத்து வருவோர்களும் இன்றியமையாததாகக் கொள்ளவேண்டும். எத்தனையோ வாலிபர்கள் இன்பம் ஒன்றையே கருதித்தம்மைக்காட்டிலும் வயதில் மூத்தாரோடு துயில்கின்றார்கள். வயதில் இளைய பெண்கள் தம்மின் மூத்தவர்களையும் மூத்த ஸ்திரீகள் தம்மைக்காட்டிலும் வயதில் குறைந்தவர்களையுமே கூடவிரும்புகிறார்களென்று மிஸ்டர் எல்லிஸ் கூறுகிறார். இங்ஙனமாக, வாலிபர்கள் தங்களைக்காட்டிலும் வயதின் மூத்த கைம்பெண்களையும் மற்ற ஸ்திரீகளையும் கண்டு விலகிவிடவேண்டும். இளைஞர்க்குத் தம்மின் மூத்த ஸ்திரீகளோடு எந்த வழியினும் தொடர்பிருக்கக்கூடாது. மூத்தவர்களான ஆண்கள் பெண்கள் கூட்டுறவைவிரும்பி அதில் இன்பம் காண்பதுபோல் இளைஞரும் பிறர்கூட்டுறவை விரும்பி அதில் இன்பம் காண்கிறார்களென்று எட்வர்ட் கார்ப்பெண்டர் சொல்லுகிறார். ஆயினும் இவர்களுக்குள் ஒரு வித்தியாசமிருக்கிறது. மூத்தவர்கள் சூக்கும வின்பத்தை வெறுத்து ஸ்தூல இன்பத்தை நாடுகிறார்கள்; இளைஞர்க்கு ஸ்தூல இன்பமும் சூக்கும இன்பமும் ஒன்றேயாகும். ஆதலால் ஒழுக்கமுள்ள வாலிபர்களின் கூட்டுறவும் தங்கள் பெற்றோர்களின் நட்பும் அன்பும் இவர்களுக்கு வேண்டுவது அவசியமாகுமென்று அவர் பின்னும் கழறுகின்றார். எந்த வகையிலும் இளைஞர்க்குச் சிற்றின்பத்தில் அவா வுண்டாகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். தற்கால நாகரிகமே சிற்றின்பத்தில் அவா வுண்டாவதற்கு ஏதுவாகின்றனதென்று அவர் கூறுகிறார்.

இந்த நாகரிகத்திற்கும் பணத்திற்கும் மிகவும் சம்பந்தமிருத்தலால் பணக்காரர்கள் கெட்டுப்போவது சாதாரணமாயிருக்கிறது. இதன் பயனாகவே பணக்காரர்கள் க்ஷீணமடைந்துவிடுகிறார்கள். அவர்களுக்குச் சந்ததி அபிவிருத்தியுமில்லை. இவ்வுண்மையை மிகச் சிலரே உணர்ந்திருக்கின்றனர். தேசசுகாதாரம் (சிக்காகோ) என்ற பத்திரிகையில் ஒருவர் எல்லா வசதிகளுமுடைய பணக்காரர்கள், சந்ததி அபிவிருத்தி செய்ய முடியாமலும், ஒரு வசதியுமில்லாத குடியானவர்கள், சந்ததி அபிவிருத்தி செய்யக்கூடியவராகவு மிருக்கின்றனரே; தகுதியுள்ளவர்கள் நிலைத்திருத்தல் (Survival of the fittest) என்பதுபோலத் தகுதியல்லாதவர்கள் நிலைத்திருத்தலென்று (Survival of the unfittest) தலைகீழாய் மாறிவிட்டதே என்று இரங்குகின்றார். இவர் எல்லிஸ் முதலியவர்களைப்போல விஷயங்களை நுணுக்கமாய் அறிபவரல்லரெனத் தெரிகிறது. உண்மை தலைகீழாய்ப் புரண்டுவிட்டதற்கு நாகரிகமே காரணமென்பதை அவர் தேறவில்லை.

தற்கால நாகரிக வாசனை சிறிதுமில்லாமலே நாம் நம் பிள்ளைகளை வளர்க்கவேண்டும். பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக் கனுப்பிக் கல்வி கற்பிப்பதைப்பார்க்கினும் உத்தம குணங்களுடைய ஒரு நல்லாசிரியரிடத்து விட்டுக் கல்விகற்பிப்பதே சிறந்ததாகும். இந்நாட்களில் அப்படிச் செய்ய முடியாவிட்டால் நல்லொழுக்கத்தையும் பெண் ஆண் தத்துவ விஷயங்களையும் அவர்களுக்குப் போதித்துவரவேண்டும். ஒரு தேசத்தின் நம்பிக்கை அதன் இளைஞர்களிடத்திலிருக்கிறது. ஆதலால் பெற்றோர்களேயன்றித் தேசமும் இளைஞர்களின் நலத்தில் கருத்துவைக்க வேண்டும். இல்லையேல் அத்தேசம் குன்றியழியும். நம் அரசியல் அறிஞர் கருத்துகள் எங்ஙனமாயினும், தற்கால நாகரிகம் ஒரு தேசத்தின் உயிரை அரித்துத்தின்னுவதென்ற வகையில் எல்லாரும் கருத்தொருமைப்பட்டவரா யிருக்கவேண்டும்.

தமிழகம்.

கம்பராமாயண நீதிச்செய்யுள்.

(135-ம் பக்கத் தொடர்ச்சி.)

(35) உண்டிலை யென்றுதம்மி லுணர்வலோர் பிணங்க நின்ற
புண்டரீ கக்கணானை போக்கொடு வரவிலானைக்
கண்டன மென்றோர்க் கென்றுங் காண்பரி யானை யென்றுங்
கண்டில மென்றோர் கண்ட கண்ணனைக் கண்ணிற் கண்டார்.

(திக்குவிசயம். 181.)

(இ-ள்.) உணர்வற்றவர்கள், உண்டென்றும் இல்லையென்றும் தம்முள் மாறுபடுகின்ற செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களை யுடையவனும், கண்டனமெனக் கூறுவோர்க்கென்றுங் காண்பதற் கருமையானவனும், என்றுங் கண்டிலோ மென்றோரால் காணப்பட்டவனுமாகிய ஸ்ரீமந் நாராயணனைக் கண்ணால் கண்டார்கள். (எ-று.)

'இராவணன் திக்குவிசயம் செய்யப்புறப்பட்டு தேவலோகஞ் சென்ற போது, இந்திரனுள்ளிட்ட வானவர் வெருவி, பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் பதுமநாபனிடம் தங்குறைகளைக் கூறுவானேகி, அறிதுயில் புரியு மமலனைக் கண்டார்களென்பதைக் கூறு மிச்செய்யுள் இறைநிலையிற்றெனவியம்புகின்றது.

" உருவென அருவென உளனென இலனென
அருமறை யிறுதியு மறிவரு நிலைமையை. " என்று,

பின்னைப் பெருமாளையங்கார் கூறியாங்கு, கடவுள் உருவமுடையவனென்றும் உருவமில்லாதவனென்றும், உள்ளவனென்றும் இல்லாதவனென்றும் அறிதற்கருமையான வேதாந்தங்களும் ஒரு தலையாகத் துணிந்து அறிதற்கரிய தன்மையை யுடையவன். 'போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியன்' (திருவாசகம்.) இவ்வடிவினன் இவ்வண்ணத்தனென் றொருவராலு மளவிட்டறியவொண்ணாதவன். நித்தியன். வியாபகன். சகலாண்ட சராசரங்களையும் படைக்கப் பிரமனும், காக்கக் கரியமாலும் அழிக்க அந்திவண்ணனுமாகியும், அவர்களல்லாதவனாகியு மிருப்பவன். தனக்கென ஒரு உருவமும் ஒருதிருநாமமு மில்லாதவனாயினும், தமதடியார் அன்பின் மிகுதியால் எவ்வெவ்விதமாகப் பாவித்து எவ்வெப் பெயரிட்டழைத்தாலும் அவ்வவ் வடிவங்களையும் பெயர்களையுமேற்று அருள்புரியும் அப்பிரமேயன். "ஒருநாம மோருருவம் ஒன்றுமில்லாற் காயிரம் திருநாமம் பாடி நாம் தென்னேணங் கொட்டாமோ " என்றார் மணிவாசகர்.

" யாருமோர் நிலைமைய னெனவறி வரியவெம் பெருமான், "
" பேருமோ ருருவமு முளதில்லை யிலதில்லை பிணக்கே. "

என்றார் நம்மாழ்வாரும். வாக்குமன மெட்டா வான் பொருளன். 'எத்திக்குந்தானாகி எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்குமவ்வுயிராய் அங்கனிருக்கு' மகண்டபரிபூரணன். இத்தகைய கடவுளைக் கண்டமாய் ஒரளவுக்குட்படுத்தி யொருவராலு மறிய வியலாது. எவர்கண்டனமெனக் கழறுகின்றனரோ அவர் உண்மையிற் கண்டவர்களே யன்று, 'மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்.'(திருவாய்மொழி)என்றபடி, அகமுகவிந்திரியங்களா லறியப்படாதவனாகலின், உருவநிலையிற் கண்டவர்கள் நிஜஸ்வரூபத்தை யறியாதவர்களே. பூதசரீரத்தோடுகூடிய அவதாரவிசேஷங்களெல்லாம் மாயையின் காரியங்களே யன்றி நிஜவடிவமாகா. பகவத்கீதையில் பகவான் பார்த்தனை நோக்கி, "பற்குந! அவதாரம் செய்ததுபோலத் தோற்றுகின்றதே யென்றால், சுத்த சத்துவரூபியாகிய நம்முடைய சுத்த சங்கற்பமென்னும் மகாமாயை செய்வித்திருக்கின்றதே தவிர, நான் யதார்த்தமாய்ப் பிறக்கவேயில்லை. இதின் யதார்த்தமானது நம்முடைய மாயையைக் கடந்து நம்மைத் தரிசித்துள்ள மகான்களுக்குமட்டுமே தெரியுமேயன்றி மற்றையோர்க்குத் தெரியத்தக்கதல்ல" என உபதேசித் திருக்கின்றனர்.

ஞானதேவர் பகவானைப் பிரத்யக்ஷமாகக்கண்டு அன்னமுண்பித்தவராயும் உண்பிக்கப்பட்டவராயு மிருந்தும், 'வேகாதசட்டி' யெனக் கபீரால் தள்ளப்பட்டார். பாண்டவர்கள் ஸ்ரீகண்ணபிரானோடு அளவளாவிக்கலந் துறவாடினவர்களா யிருந்தும், அப்பெருமானது யதார்த்த ஸ்வரூபத்தைக் கண்டார்களில்லை. சகதேவனைப் பார்த்து, வாசுதேவன் 'என்னைப் பிடித்துக்கட்டினால் பாரதயுத்தம் நடைபெறாமலிருக்கு மென்றனையே. என்னை யெங்ஙனங் கட்டுவை?' யென்றபோது, "மாதவா! 'உன்னை நீ தானுமுணராதாய்! உன் வடிவந்தன்னை நீ காட்டத் தளைந்திடுவேன்' யா"னென்றான். உடனே பதினாறாயிரம் வடிவங்கொண்டான் பக்தபராதீனன். அப்போது ஞானபண்டிதனாகிய சகாதேவன் இவ்வுருவங்களெல்லாம் அவனுருவங்களல்ல வென்றறிந்தவனாகலின், 'மூலமாந்தோற்றமுணர்ந்து, எவ்வுலகும் தாயஅடியிணைகளைத் தன் கருத்தினாற் பிணித்தான்.' மனமற்ற நிலையிற்றான்றுவோனாகலின் கண்டேனெனக் கூற வியலாது.

ஞானகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனாலு மிதன்பெருமை எவர்க்கார் சொல்வார்
அதுவானா லதுவாவ ரதுவே சொல்லும்." என்ற

தாயுமானார் உரையின்படி, காண்பான் காட்சி காட்சிப் பொருளாகிய ஞாதுரு ஞானம் ஞேயமென்னும் திரிபுடியற்ற நிலையிலே நின்று நோக்கா நோக்கால் நோக்கப்படுவன். தன்னை யிழந்த நிலையிற் றோன்றுவதை எதனாற் கண்டதாகக் கூறுவது? ஆகையால் தெரிசித்த மகான்கள் காணவில்லையெனக்கூறுவார்கள். 'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என்பது ஆன்றோர் மொழி.

உணர்ந் துணர்ந் திழிந்தகன் றுயர்ந் துருவியந்த விந்நிலைமை
உணர்ந் துணர்ந் துணரினு மிறைநிலை யுணர்வரி துயிர்காள்!

எனத் திருவாய்மலர்ந்தருளினார் சடகோபர்.

ஆகலின் பிரமநிஷ்டராகிய சற்குருவை யடைந்து ஞானோபதேசம் பெற்று, ஆசையை யொழித்து, அகப்பற்று புறப்பற்றுக்களாகிற் அகங்கார மமகாரங்களை யறவே யகற்றி, மனத்தை யொருமுகப்படுத்தி அவனடியில் லயிக்கச்செய்து, மனமற்ற பரிசுத்த நிலையைப் பெற்றோரே அப்பராபரனைத் தெரிசிக்கப் பெறுவார்களென்பது இச்செய்யுளால் இனிது விளங்குகின்றது.

(36) ஊள்ளபோ தினிதுண் டிலாதபோ தவரோ டுறவிட்
டுறு மிடர் தேடும்
ஒள்ளிய ரல்லா குறவுபோல் நெடுநாள்
உயர்தரு மலர்மது வுண்டு

மெள்ளவம் மரம்பூ மாறிட விட்டு
வேறொரு பூமரந் தேடி
கள்ளவிழ் கோதை கமழ்குழ லணங்கே
களிவண்டு போவன காணாய். (சீதை வனம் புகு-18)

வசந்தகாலத்தி லொருநாள் மாலைப்போதில் பிராட்டியாரோடும் பூம்பொழிலடைந்த இராமபிரான் அந்நந்தவனத்தி னெழிலை ஜானகியாருக்கு வருணித்துக் கூறியதை யுணர்த்துஞ் செய்யுட்களி லொன்றாகிய இதன் பொருள்:— தேனைச்சொரியும் மலர்மாலை மணம் வீசிக்கொண்டிருக்கின்ற கூந்தலையுடைய நாயகி! களிப்பையுடைய வண்டுகள், 'ஒருவனிடத்து செல்வமிருந்தபொழுது உறவு கொண்டாடி யுண்டுகொண் டிருந்து கை வறண்டகாலத்தில் அவருறவைவிட்டு வேறிடந்தேடிச் செல்லும் நற்குண மில்லா மனிதரைப்போல்', அநேககாலமாய் உயர்ந்த விருக்ஷத்திலுள்ள தேனையுண்டு, பூப்பொழிந்த காலத்து அதைவிட்டு வேறொரு பூமரந் தேடிச் செல்லுந் தன்மையைப் பார்" எனக் காட்டினர் என்பதாம்.

"காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்தின் மேலாடு மீனிற் பலராவர்." "காவாதளிப்பரே லுற்றா ருலகத்தவர்" என்றபடி, ஒருவன் செல்வந்தனாயிருக்குங் காலத்து பந்துக்களல்லாதாரும், 'என் அண்ணன் மனைவிக்கு அக்காள் புருஷன் தம்பிக்கு, இவருடைய சிறியதாயார் மகளின் மூத்தாருக்கு மச்சான் பெண்ணைக்கொடுத்திருக்கிறது' என்று ஏதோ சம்பந்தங் காட்டி இச்சகம்பேசி விலாப்புடைக்கத் தின்பதும், அவனே பின்பு ஏழையாய்விட்டால், 'அவன் எங்கோ தூரஉறவு' என்று நீங்கிப்போதலும், தன்னலமிகுந்த தரித்திரங்களின் செயல்களாம். இவர்களை நாய்களினுங் கடையான நன்றிகெட்ட பேய்களென்று சொல்வதும் இழிவாகாது. இவர்கள் உண்மையான உறவினராகார். அவர்கள் இன்பமுற்றிருந்தபோது தாமுமின்பந் துய்த்ததுபோல, துன்பக்காலத்திலும் அவரோடொக்க விருந்து அத்துன்பத்திலும் பங்குடையவர்களா யிருப்போரே உண்மையான உறவினராவரென்னும் நீதியைக் கொண்டது இச்செய்யுள். இது,

அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியு மாம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு.

'உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்' என்னும் நீதிப்பாக்களையும் நினைப்பூட்டுகின்றது. (தொடரும்)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

187458

தனித் தமிழ்ப் பாதுகாப்பு.

(பல்லாவரம் பொதுநிலைக் கழகத்து
நாகை நீலாம்பிகை அம்மை எழுதியது.)

1923-ஆம் ஆண்டு, மாசித்திங்கள் 27-ஆம் நாள் வெளிவந்த அருமைத் திராவிடனில் "தமிழ் மொழியும் அதன் முற் செலவும்" என்ற பொருள் ஒன்று "தமிழகம்" என்னும் ஓர் இதழினின்றும் எடுத்தெழுதப் பட்டிருந்தது. அதனை நன்கு பயின்றபின் அதன்கண் தமிழைப்பற்றிய பல பொருந்தாக்கொள்கைகள் காணப்பட்டன; அவைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

187458.

அறிவானும் நாகரிகத்தானும் சிறந்துவிளங்கும் ஒரு கூட்டத்தார் ஒருநாட்டிலிருப்பின் மற்ற நாட்டிலுள்ளார் தாந்தொகுத்த பண்டங்களையும் பொருள்களையும், விலைப்படுத்தும் பொருட்டு அந்நாகரிக மக்களிடம் வந்து கலப்பர்; இன்னும் பல்வகை இடையூற்றானுந் தம் நாடுதுறந்து பிற நாடுபோந்து குடிபுகுந்து அவரோடு கலப்பாரும் உளர். எனவே, நாடு துறப்போர் இருவகைப்படுவர். இங்ஙனம் பண்டம் விற்போரும் குடிபுகுவோருமென்னும் இருகூட்டத்தாரும் நாகரிகவாழ்க்கையுடைய கூட்டத்தாரிடம் வந்து கலப்பது இயற்கை. இங்ஙனம் நேரும் மக்களின் கலப்பால் ஒருவர்பேசும் ஒருமொழிச் சொற்கள் மற்றையோர் பேசும் மற்ற மொழியிற் கலவாநிற்கும். இவ்வாறு நேருங் கலப்பு இயற்கை ஏதுவாகும். பண்டங்கள் விற்றற்கும் குடிபுகுதற்கும் ஒரு நாட்டார் தம் நாடு நீங்கிப் பிறிதொரு நாகரிக நாட்டிற் புகுந்து அந்நாட்டினரை ஒன்றிப் பிழைக்குங்காலத்து அவர்தம் மொழிச்சொற்கள் மற்றவர்பாற் கலக்கும். இவ்வியற்கையைத் தடுத்தல் அரிதினும் அரிதாம். ஆனாலும், நல்லிசைப் புலவர் மன ஒருமைப்பாடுடையராய்ப் பகுத்துணர்வோடு ஆய்ந்து நூல்கள் எழுதும்போது பிறமொழிச் சொற்கள் நம் மொழியில் வந்து கலப்புறாவாறு எழுதுதல் கூடும். இனி, நாம் கருதியவற்றைத் தெளிவாக விளக்கவேண்டியதற்குப் போதுமான சொற்கள் நம் மொழியில் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்த்துத் தம் மொழியிற் போதுமான சொற்கள் இல்லாவிடின் அவைகளைப் புதிதாகச் செய்து கொள்ளாமற் சோம்பலுற்றுப், பிறமொழிச் சொற்களை எளிதாக எடுத்து நம் மொழியிற் சேர்த்தெழுதுவதே செயற்கை ஏதுவாகும் ஒரு மொழி. பிறமொழிச் சொற்களை எடுத்துத் தன்னுட் சேர்த்து வழங்கல் வேண்டுமாயின் அம்மொழி உயர்ந்த நாகரிக வாழ்க்கைக்குப் போதுமான சொற்கள் அமையப்பெறாததோர் ஏழைமொழியாக இருத்தல் வேண்டும். ஆங்கிலமொழியானது மிகவும் ஏழைமொழியா யிருத்தலின் அதன்கண் இலத்தின் கிரீக் முதலிய பிறமொழிச் சொற்களைச் சேர்த்து வழங்குகின்றனர். ஆங்கிலமொழியிலிருக்கும் கிரீக் இலத்தின் முதலிய பிறமொழிச் சொற்களை வேறுபிரித்தெடுத்துவிட்டால் அதனைத் தனியே வழங்குத

லும் அதன் கண் நூல்கள் எழுதுதலும் இயலா. இங்ஙனம் ஆங்கிலம் போன்ற ஏழைமொழிகட்கே பிறமொழிச்சொற்களின் உதவி இன்றியமையாது வேண்டப்படும். தமிழோ பழையகாலந் தொட்டுப் பிறமொழிச் சொற்களின் உதவியை ஒரு சிறிதும் வேண்டாது தனித்து நின்று மிகவும் அழகாய் விளங்குவது. இக்காலத்தும் தமிழ் தனித்து வழங்கவும் எழுதவும் எளியதாயிருக்கின்றது. இந்நாவலந்தீவில் வழங்கும் தமிழ் ஆரியம் முதலான மொழிகளையும், ஐரோப்பா ஆசியாவில் வழங்கும் ஏனை மொழிகளையும் நுணுக்கமாகவும் விரிவாகவும் நன்காராய்ந்த ஆசிரியர் கால்ட்வெல் துரைமகனார் தாம் ஆங்கிலத்தில் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்புமை இலக்கணம் என்னும் நூலில் தனித்தமிழின் சிறப்பைப்பற்றி எழுதியவற்றுள் ஒரு சிறு பகுதியை இங்கே மொழி பெயர்த்தெழுதுகின்றாம். "வடசொற்களை நீக்கிக்கொள்வது இப்போது தெலுங்கு மொழியால் இயலாதென்பது உண்மைதான்; கன்னடத்திற்கோ இன்னும் மிகுதியாய் இயலாது; மலையாளத்திற்கோ முற்றிலும் இயலாது; இம்மொழிகள் வடமொழியினின்று ஏராளமான சொற்களைக் கடன்வாங்கியிருத்தலாலும், ஏதோர் உதவிக்கும் வடமொழியினையே எதிர்நோக்கியிருப்பது அவற்றிற்கு மிகவும் வழக்கமாய் வந்துவிட்டமையாலும், அவைகள் தாம் தனித்து நிற்கமுயல்வது சிறிதும் கைகூடாததொன்றாம். ஆனால் திராவிட வழக்குகளுள் மிகவும் பண்படுத்தப்பட்டதாகிய தமிழ்மொழியோ வடசொற்களை அறக்களைந்து விடுதற்கு வல்லதாவதோடு, வேண்டினால் தான் தனித்து நின்று அதன் உதவியை நாடாமலே ஓங்கி வளரவுங்கூடும். ஏறக்குறையப் பழைய இலக்கண இலக்கிய நூல்கள் எழுதப்பட்டுள்ள செந்தமிழ் மொழியில் வடசொற்கள் மிகவும் அருகிக் காணப்படும். வடமொழியிலிருந்து வரும் சொற்களையும் எழுத்துக்களையும் கருத்தோடுங் கவலையோடும் முழுதும் விலக்கித் தமிழொலிகளையும் தமிழ்ச் சொற்களையும் தமிழ் முதனிலைகளையு மட்டுமேவைத்து எழுதப்படுதலினால் நூல்களிலுள்ள செந்தமிழ் வழக்கு மக்கள்பேசும் உரை வழக்குக்கு வேறுபட்டதாயிருக்கின்றது. இவ்வளவு கருத்தாக வடமொழிச் சொற்களை விலக்கும் எண்ணம் தமிழ் கற்ற அறிஞர் உள்ளத்தில் குடிகொண்டிருத்தலினால், தெலுங்கு முதலிய ஏனைத் திராவிட மொழி நூல்கள் வடசொற்களை நிரம்பச் சேர்த்துக்கொள்ளுதற் கேற்பத் தாம் உயர்வாகக் கருதப்படுதல் போலாகாமல், தமிழ்நூல்களானவை எவ்வளவுக்கு வடசொற்களைக் களைந்து தனித்து நடைபெறுகின்றனவோ, அவ்வளவுக்கு அவை உயர்ந்தனவாகவும் இனிமை வாய்ந்தனவாகவும் திருத்தமுடையனவாகவும் கருதப்படுகின்றன. மேலும், நாட்டுப் புறங்களிலுள்ள தமிழ்மக்கள் பேசும் தமிழ் மொழியானது வடசொற் கலப்பின்றித் தூய செந்தமிழ் வழக்கோடு ஒத்ததாகவும் இருக்கின்றது. எந்த நாட்டிலும் அந்நாட்டாருடைய செய்யுட்களும் அந்நாட்டின் குடியானவரின் பேச்சுக்களுமே அந்நாட்டவர் வழங்கும் மொழியின் பழந்தன்மையினைத் தெரிந்துணர்தற்குக்

கருவியாகும்." இங்ஙனமாகத் தமிழின் உண்மைச் சிறப்பை உள்ளவாறுணர்ந்து நடுநிலை வழாது அதனை அறிவுறுத்திக் காட்டிய கால்ட்வெல் ஆசிரியருடைய மெய்யறிவுதானும் இல்லாமல், நம் தமிழரில் ஒருசாரார் தமிழ் வடமொழியினின்று உண்டாயதாமெனவும், அஃது ஆரியத்தின் உதவியின்றி நடவாதெனவும் நடுநிலை வழுவிப் பொய்யுரை கூறித் தெய்வத் தமிழைப் புறம்பழித்தல் பெரிதும் நாணத்தகுவதாம். தமிழில் மற்ற மொழியின் உதவியின்றிப் பேசவும் எழுதவும் போதுமான சொற்கள் நிரம்ப உண்டென்பதை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட தொல்காப்பியம், திவாகரம் முதலிய அரும்பெருநூல்களில் எவரும் காணலாம். இவ்வுண்மைகளை உற்றுநோக்கா ஒரு சிலரே "ஒன்றேயாயினுந் தனித்தமிழுண்டோ" என்று கூறி நந் தனித் தமிழுக்குக் குறைவு தேட முந்துவர்.

இக்காலத்திற் கிணங்க நந்தமிழ்மொழி வளர்ச்சியடைய வேண்டுமாயின் ஏராளமான வடசொற்களைத் தமிழிற்சேர்த்து எழுதுதலும் வழங்குதலும் வேண்டுமென்றும், ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது வடசொற்கள் இன்றியமையாது சேர்க்கப்படல் வேண்டுமென்றும், மேற்கூறிய தமிழக இதழில் ஒருவர் கூறுகின்றார். அதனை ஆராய்வாம். நந்தமிழில் ஒருபொருளை யுணர்த்துதற்குப் பல சொற்களும் பல பொருள்களை யுணர்த்த ஒரு சொல்லும் உண்டென்பதைப் பிங்கலந்தை முதலான அரும்பெரு நூல்களினின்றும் எடுத்துக் காட்டுவாம். இயல்பினை யுணர்த்த 21 சொற்களும், உயர்வினை யுணர்த்த 17 சொற்களும், வலிவினை யுணர்த்த 34 சொற்களும், அச்சத்தினை யுணர்த்த 19 சொற்களும், மலையினை யுணர்த்த 28 சொற்களும், இன்னும் இங்ஙனமே பிற பொருள்களை யுணர்த்தப் பலவாகிய சொற்களும் இருக்க, மொழி பெயர்க்கப்போதுமான சொற்கள் மிகுதியாக இல்லையென்று கூறுவது முற்றும் பொருந்தாதன்றோ? (தமிழ்ப் பாஷையைச் செவ்வனே கற்காததால் மொழி பெயர்க்கும் ஆற்றலில்லாதார் வேறென்ன கூறுவர்?) மொழிக்குப் பாஷையென்றும், மகிழ்ச்சிக்குச் சந்தோஷமென்றும், அன்புக்குப் பக்தியென்றும், சொல்வது குற்றமாஎன்று கேட்கின்றார். மேற் குறிப்பிட்டபடி ஒரு பொருள் குறித்த பல சொற்களும், பல பொருள் குறித்த ஒரு சொல்லும் நந்தமிழில் அளவின்றி யிருக்க, அவைகளைப் புறம்பே விடுத்து வல்லோசையுடைய சமஸ்கிருதச் சொற்களை நந்தமிழோடு சேர்த்து வழங்குவது, ஒருவன் தனக்கு அரிதிற் கிடைத்த இன்சுவைப் பண்டங்களை வீசி யெறிந்துவிட்டு இல்லந்தோறுஞ் சென்று வசிய உணவை இரந்துண்பதற்கே ஒப்பாம். மேலும், தமிழ்ச் சொற்கள் இருக்க அவற்றை விடுத்துப் பிறமொழிச் சொற்களை எடுத்து வழங்கி வருவோமாயின், தமிழ்ச் சொற்கள் நாளடைவில் வழங்குதலின்றி ஒழியுமன்றோ? இங்ஙனம் பிறமொழிச் சொற்களை வழங்கினமையால் எத்தனையோ அருந்தமிழ்ச் சொற்கள் முன்னமே வழங்காதுபோயின.

நூல்களில் அவைகள் இல்லையானால் அவைகளை நாம் காணுதலே இயலாது போயிருக்கும்.

ருஷியர் தம்மூர்களுக்கு ஜர்மன் மொழிப் பெயர்களை அமைத்திருந்தனர். பிறகு தமக்கும் ஜர்மனியர்க்கும் போர் துவங்கியபோது தாம் பயன்படுத்திய ஜர்மன் மொழிச் சொற்களை அறவே நீக்கித் தம்மொழியினின்றே தமக்கெனப் புதிதாகச் சொற்கள் அமைத்துக் கொண்டனர். இங்ஙனம் ருஷியநாட்டினர் தமக்குப்போதுமான சொற்கள் இல்லாதிருந்தும் பின் பெரிதும் வருந்தித் தமக்கென சொற்கள் தம்மொழியிலேயே கண்டறிந்திருக்க, நந்தமிழரிற் சிலர் அரிய முழுமாணிக்கங்களாந் தீஞ்சுவைத் தமிழ்ச்சொற்களை விடுத்து ஓசையினிமை யில்லாச் சமஸ்கிருத மொழிச் சொற்களை நந்தனித்தமிழிற் சேர்த்து நந்தமிழின் இனிமையையும் பழமையையும் தாழ்த்த முயல்வதை என்னென்றுரைப்போம்!

இனிமேற் கூறியவர் கருத்துக்கிசைய, நாம் நமக்குரியவல்லா வடசொற்களை நந்தமிழிற் சேர்த்து வழங்குவதுபோலவே அவ்வக்காலத்துத் தமிழரோடு வந்து பழகும் சீனர், ஜப்பானியர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலர், அராபியர், முதலானவர் மொழிச் சொற்களையும் அதனோடு சேர்த்து வழங்கல் வேண்டுமன்றோ? இங்ஙனம் அவ்வக்காலத்துத் தோன்றும் வடமொழி முதலான நமக்குரிய வல்லாப் பிறமொழிச் சொற்களை நந்தமிழிற் கலந்து வழங்குவோமாயின், தமிழ் முழுதும் தன் இனிய சொற்களை இழந்து தன் உண்மைநிலை மாறிக், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளினுஞ் சீர்கெட்ட நிலையை எய்துமென்பது திண்ணமன்றோ. நந்தமிழைத் தனித்து வழங்கவும் எழுதவும் இயலுமென்பதை, நம்முன்னோரான மாணிக்கவாசகர் முதலான ஆசிரியரும் தாயுமானவர் முதலிய பெரியோரும் நன்கு உணர்ந்திருந்தும் தாமியற்றிய பாடல்களில் வடமொழிச் சொற்களைத் தமிழோடு சேர்த்துப்பாடியது , என்னையோவெனின், வடநாடுகளில் இருந்த ஆரியர் அந்நாடுவிட்டுப் பெயர்ந்து தமிழ்நாட்டிற் புகுந்தபின், தமிழரும் ஆரியரும் ஒருமித்து வாழுநாளில் ஆரியர் வழங்கிய வடமொழிச் சொற்கள் தமிழினும், தமிழர் வழங்கிய செந்தமிழ்ச் சொற்கள் வடமொழியினும் கலந்து நிலைபெறுவவாயின. ஆரியர் மிக நெருங்கிப் பழகாத காலத்து எழுதிய தொல்காப்பியம், கலித்தொகை, புறநானூறு முதலிய அரியநூல்களில் ஆயிரத்துக்கு ஒன்றிரண்டு விழுக்காடு வடசொற்கள் ஓரோவிடத்து அருகிக் கலந்தன. பின் ஆரியர் நெருங்கிப் பழகப்பழகத் தமிழில் வடசொற்கள் சிறிது கூடக் கலந்தன. இக்காலத்தும் தமிழர் ஆங்கிலரோடு கலந்து பழகுவதால் ஆங்கிலச் சொற்களிற் பலவுந் தமிழிற் கலந்து காணப்படுகின்றன. முன்னொருகால் துருக்கர் அரசாண்ட காலத்து துலுக்குச் சொற்களிற் சிலவுந் தமிழிற் கலப்பவாயின. தமிழில் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக்காணப்படுவது போல், துலுக்குச் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் காணப்படாமை யென்னையோ வெனிற் கூறுதும். ஆரியர் நடு ஆசியா என்னும் குளிர் நாட்

டில் வறுமையில் துன்புற்றுப், பின் அதனைவிட்டுத் தமிழ்நாடு புகுந்து தமிழரை நெருங்கி யணுகி வாழ்ந்தனராகலின், அவர் சொற்கள் தமிழில் மிகவுங் கலந்தன. துருக்கரும் ஆங்கிலரும் அவர்போல் அத்துணை நெருங்கித் தமிழரோடு உறவாடாது வாழ்கின்றமையின், அவர்மொழிச் சொற்கள் மிகக்கலவாது, ஓரோவிடத்து மிக அருகிக் கலப்பவாயின. தமிழரோடு ஆரியர் கலந்து பழகத் துவங்கிய காலத்து இருவகுப்பாருஞ் சிறிதும் அழுக்காறின்றி மன ஒருமைப்பாடுடையராய்த் தமிழர் அவ்வாரியர் சொற்களையும், ஆரியர் தமிழர் சொற்களையுங் களங்கமின்றி எடுத் தாள்வாராயினர். ஆனால், இக்காலத்திலோ தம்மை ஆரியராகக் கருதியிருப்பவர் தமிழர்பால் அழுக்காறுடையராய்த் தமிழையும் தமிழரையும் மிகவும் இழித்துப் பேசுவதோடு, தமிழ் ஆரியத்தினின்றும் பிறந்ததாமெனவும் வாய்கூசாது கூறித் தமிழுக்குக் குறைவுதேடுகின்றனர். இங்ஙனம் நந்தமிழரோடு ஒற்றுமையின்றி முரண்பட்டு இழிவாகப் பேசும் பிறர் சொற்களை நாம் எடுத்தாள்வது நந்தமிழுக்கும் தமிழர்க்கும் இனி ஒரு பெருங்குறைவாம். இவ்வாறு நம்மையும் நந் தனித் தமிழையும் ஓவாது இழித்துக்கூறு நிற்கும் பிறரையும் அவர் மொழியினையும் உயர்த்திப் பேசிக்கொண்டு அலையுந் தமிழர் சிலரைத் தமிழர்எனக் கூறுதல் பொருந்துமோ?

இனி, இந்து சாதனத்தில் யாழ்ப்பாணத்துத் தமிழர் ஒருவர்தாம் தமிழ்வளர்ச்சியைப்பற்றி எழுதுகையில், ஆங்கிலமொழிச் சொற்களைத் தமிழோடு கலந்து எழுதுதல் ஆகாது என்று வற்புறுத்திக் கூறுகின்றார். அது நமக்கு மகிழ்ச்சிதருவதேயாயினும், அவர்தாமெழுதுந் தமிழ்க் கட்டுரையில் வடசொற்களைக் கலந்தெழுதுவது நமக்குப்பெருவருத்தத்தைத் தருகின்றது. ஆங்கிலமொழிச் சொற்களை எடுத்துக்கலந்து தமிழின் தூய்மையைக் கெடுப்பது தகாதென்று வழக்காடுமிவர் ஆங்கிலத்தைப் போலவே தமிழுக்குப் புறம்பான வடமொழிச் சொற்களையும் எடுத்து வழங்கித் தமிழின் தூய்மையைக் கெடுப்பது நன்றாமா? அவர்தாம் தமிழ் வளர்ச்சி என்றெழுதிய கட்டுரையின் முதல் முப்பது சிறுவரிகளுக்குள் பாஷை, மனிதர், இருடிகள், அநேகர், சங்கம், சுத்தி, சரஸ்வதி, அவதாரம், இராஜாக்கள், வித்துவான்கள், நியமம், பிரமாணம், அங்கீகரித்தல், என்னும் வடசொற்களை எடுத்துச் சேர்த்து எழுதி யிருக்கின்றார். இன்னுமிங்ஙனமே அவர் தமது கட்டுரையில் நெடுக எடுத்துச் சேர்த்திருக்கும் வடமொழிச் சொற்கள் இன்னும் பலப்பல. இவ்வட சொற்களுக்கு நேரான செந்தமிழ்ச் சொற்களாகிய மொழி, மக்கள், முனிவர், பலர், கழகம், துப்புரவு, கலைமகள், பிறப்பு, அரசர்கள், புலவர்கள், முறை, மேற்கோள், ஏற்றுக்கொள்ளல், என்பன முறையே இருக்கவும், இவற்றை விடுத்து வடசொற்களை வீணே எடுத்துச் சேர்த்து எழுதுதல் ஆங்கிலமுணர்ந்தார்க்கு இவர் தாங்கூறும் குற்றத்தில் இவர் தம்மையும் வீழ்விக்குமன்றோ ?

அங்ஙனமன்று, வடசொற்களைத் தமிழிற் கலந்து எழுதுவது இக்காலத்தில் வழக்கமாயிருக்கின்றது, ஆனால், ஆங்கிலச் சொற்களை அங்ஙனம் வழங்குவது வழக்கத்திலில்லை; அதனால் அதுகுற்றமாம் என்றுரைப்பராயின்; கூறுதும்: தமிழுக்குப் புறம்பான வடசொற்களைத் தமிழிற் கலந்தெழுதுவது பண்டைக்காலத்தில் இல்லாமல் பின்றைக் காலத்தில் உண்டாயிற்றென்பது பத்துப்பாட்டு, கலித்தொகை முதலான பண்டைச் செந்தமிழ் நூல்களையும், இராமாயணம், பாரதம், முதலான பின்றைத் தமிழ் நூல்களையும் ஒப்பிட்டு நோக்குவார்க்கு நன்கு விளங்கும். ஆகவே, பழைய காலத்திலில்லாமல், இடைப்பட்ட காலத்திற் றுவங்கிய வடமொழிக் கலப்பு அக்காலத்துப் புதிதாயிருந்து பின் வரவர வழக்கத்தில் வந்துவிட்டாற்போல, இக்காலத்திற் றுவங்கும் ஆங்கிலச் சொற் கலப்பும் இப்போது புதிதாய்த் தோன்றினும், தடை செய்யப்படாவிட்டால், இனி வரவர வழக்கமாய் வந்துவிடு மன்றோ? ஆகவே, புதியதா யிருந்தாலும் பழையதா யிருந்தாலும் பிறமொழிக் கலப்புத் தமிழ்மொழியை அழித்தலின், அதனைத் தடை செய்து தமிழைத் தூய்மையாகப் பாதுகாத்து வளர்த்தல் தமிழறிவுடைய ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாத கடமையாம். ஆங்கில மொழிக் கலப்பை எளனஞ்செய்து அதனை விலக்க முன்வந்த அறிஞர் அங்ஙனமே வடமொழிக் கலப்பையும் எளனஞ் செய்து அதனையும் விலக்கித் தமிழைப் பாதுகாக்க முயலுதலே சிறந்த முறையாம்.

இனி, அவர் ஆரிய மொழி தேவர்களுக்குரிய தென்றும், தமிழ் மொழி மக்களுக்குரியதென்றும், அவ்விருமொழியும் முனிவர்களுக் குரியன வென்றும், எழுதி யிருக்கின்றார். இவர் கூறும் இக்கூற்றும் சிறிது ஆராயற்பாலதாம். இவர் கூற்றை உற்றுநோக்கின் மக்களினும் உயர்ந்தோர் முனிவரும், முனிவரினும் உயர்ந்தோர் தேவரும் ஆவரென்பது புலப்படும். அதனால், தாழ்ந்த நிலையிலுள்ள மக்கள் பேசுந் தமிழ்மொழி தாழ்ந்ததென்பதும், மிகவுயர்ந்த நிலையிலுள்ள தேவர்கள் பேசும் ஆரிய மொழி மிகவுயர்ந்ததென்பதும் அவர் கருத்தாகும். அவர் கருத்தின் படியே வைத்துக்கொள்வோமென்றாலும், தேவர்களுக்குரிய வடமொழிச் சொற்களைத் தாழ்ந்த நிலைக்கண் உள்ள மக்கள் எடுத்து வழங்குதல் பொருத்தமாமா? தேவர்களுக்குரிய அவ்வாரியச் சொற்களை மக்களுள் ஒருவராகிய தாம் தமது கட்டுரையில் எடுத்து வழங்குவது குற்றமன்றோ?

இனித் தேவர்களுக்குத் தாம் ஆரியமொழி வேண்டுமோ என்பதனை ஒரு சிறிது ஆராய்வாம். மக்களென்போர் அறியாமை யிருளால் கவரப்பட்ட உள்ளமுடையராதலால் அவர் தம்முள் ஒருவர் மற்றொருவருள்ளத்தில் நிகழ்வனவற்றை அறியமாட்டாதவரா யிருக்கின்றார். ஆகவே, அவர் தமதுள்ளத்திற் றோன்றும் எண்ணங்களைப் பிறர்க்குப் புலப்படுத்தவும், பிறர் உள்ளத்திற் றோன்றும் எண்ணங்களைத் தாம் தெரிந்துகொள்ளவும் சொற்களின் உதவியைப் பெரிதும் வேண்டி நிற்கின்றார். இனி, மிக

வுயர்ந்த நிலைக்கணுள்ள தேவர்களோ என்றால் அறியாமை யிருள் நீங்கி அறிவு விளக்கம் பெற்றுத் தத்தம் உள்ளங்களில் நிகழ்வனவற்றைத் தாமாகவே அறிந்துகொள்ளும் ஆற்றலுடையர்; அவர்களுள் ஒருவர் உள்ளத்திற் றோன்றிய எண்ணம் பிறர் உள்ளத்தில் உடனே புலனாகா நிற்கும். அங்ஙனம் இயல்பாக விளங்கும் உள்ளமுடைய தேவர்களுக்குச் சொற்களினுதவி சிறிதும் வேண்டப்படுவதில்லை. அவ்வாறிருக்கத் தேவர்களும் மக்களைப்போற் சொற்களின் உதவி கொண்டே, தம்முள்ளத்தில் நிகழ்வனவற்றை வெளியே புலப்படுத்துவராயின், மக்களுக்குந் தேவருக்கும் வேறுபாடென்னை? அதனால் தேவர்கள் ஆரியமொழியை மட்டுமே பேசுவரென்பது ஒரு சிறிதும் பொருந்தாது. சிற்றறிவும் சிறுதொழிலும் உடையாராகிய மக்கள் பொருட்டாகவே மொழிகள் தோன்றினவல்லது, பேரறிவும் பேராற்றலுமுடைய தேவர்கள் பொருட்டல்ல. மக்களுள்ளும் அருந்தவ ஒழுக்கத்தான்மிகுந்து அறியாமை நீங்கப் பெற்றார்க்கு எவ்விடத்தும் எக்காலத்தும் நிகழும் நிகழ்ச்சிகளெல்லாம் ஒருங்கே தோன்றுமென்றும், அது 'தவக்காட்சி'யா மென்றும் சிவஞானசித்தியாரில் "சமாதியான் மலங்கள் வாட்டிப், பொருந்திய தேசகால இயல்பகல் பொருள்களெல்லாம், இருந்துணர்கின்ற ஞானம் யோக நற்காண்டலாமே" என்னுந் திருப்பாட்டால் வற்புறுத்தப்படுதல் காண்க. மக்களினும் உயர்ந்த முனிவர்க்கே மொழிகளினுதவி வேண்டப்படாதாயின், அம்முனிவரினும் உயர்ந்த தேவர்க்கு மொழியினுதவி வேண்டப்படுமென்பது எத்துணையும் பொருந்தாததா யிருக்கின்றது! தமிழரையும் அவர் வழங்குந் தமிழ் மொழியினையும் தாழ்த்தும் பொருட்டாகவே ஆரியர் தம்மைத் தேவரெனவும், தாம் பேசும் ஆரிய மொழியைத் தேவமொழி யெனவும் உயர்த்திப் பேசிப் புராணங்களில் பொய்க்கதை கட்டிவிட்டார்கள். அக்கதையின் பொய்த் தன்மையுணராது நந்தமிழ்ப் புலவரிற் சிலரும் அதனை மெய்யெனக்கொண்டு, தம்மையும், தம் அருந் தமிழ் மொழியையும் தாமே இழிவுபடுத்தி, ஐயகோ! ஏமாந்து போயினரே! இனியேனும், அவர்கள் அப்பொய்ம்மை யுணர்ந்து தமக்கும் தமது செந்தமிழ் மொழிக்கும் ஆக்கந் தேடுவாராக.

சந்நியாசம்—மோட்ச நிலை.

(141-ம் பக்கத் தொடர்ச்சி)

உள் இந்திரியங்களை நிக்கிரகம் செய்யும் பிரத்தியாகாரம் என்னும் யோகத்தால் கேவல சின்மாத்திரமாக இருப்பதுவே எங்கும் பொங்கிய ஏக ரஸ பிரம சமாதி யென்னும் மோட்சமாம். சுக துக்கங்களற்ற பரிபூரண சமாதியிலிருப்பவனே முக்தன் என்னப்படுவான். எல்லாப் பூதங்களிலும் பாவனையை விட்டு வெளிப்பட்டவன் சந்திரனைப்போல நிர்மலன். அவன் சூரியனைப்போலப் பிரகாசிப்பான். செய்ததும், செய்கிறதும், செய்யப்படுவதுமான கர்மங்கள் குலத்தாலும், செல்வத்தாலும், தேகவியலாலும்,

தொழிலாலும் வரும் கன்மங்களை ஞானாக்கினியால் தகித்து வெளிக்கிளம்பினவனே முக்தன். மற்ற வித்தைகள் எல்லாம் அப்பியாசம் பண்ணுமலிருந்தால் அழியும். ஞான கலை மாத்திரம் உள்ளே விருத்தியாகும். விஷய போகங்களில் ஆசையுள்ளவரைக்கும் ஆன்மா ஜீவன் என்னப்படுவான். அந்த ஆசை அவிவேகத்தினாலுண்டானதேயன்றி ஆன்மாவிற்கு இயற்கையானதல்ல. விவேகத்தால் ஆசை ஒழிந்தால் ஜீவாவஸ்தை ஒழிந்துபோகும். அப்போது அவன் பிரமம் ஆய்விடுவான். நிராமயனாய் மிருத்யுவைக் கடந்து நிற்கும் அவனுடைய பரிபூரணானந்தத்துக்கு ஒப்புயர்வில்லை. உலக வாசனையைக் கடந்து சம்பூர்ண சைதன்ய மயமாய் நிற்கும் அந்த யோகியின் பரமானந்தத்துக்கு எதையும் உபமானமாகச் சொல்ல முடியாது. சாஸ்திரார்த்தங்களி லுள்ள வாசை யொழிந்து பற்பல ரசங்களுடன் கூடின பற்பல காரியங்களில் சந்தோஷமற்றுச் சங்கற்ப விகற்பங்களை விட்டவன் சாசுவதமான சுக சொரூபமாக நிற்பான். அவன் வர்ணாசிரம சாஸ்திரக் கட்டுகளை யறுத்துக்கொண்டு கூட்டைவிட்டு வெளிப்பட்ட சிங்கத்தைப்போல விளங்குவான். விஷய வாசனை யென்கிற வியாதியை ஞான ஔஷதத்தினால் தொலைத்து விளங்குகிற அந்த யோகி சரத்கால ஆகாயம்போல நிர்மலமான பிரகாசத்தைப் பெறுவான். ஆழமானதும் நிர்மலமாயுள்ளதுமான மடுவில் காணப்படும் மலையின் நுனியைப்போல விளங்குவான். எல்லாக் கன்மங்களுமற்று நித்தியத் திருப்தியுள்ளவனை அவன் புண்ணியத்தாலாவது பாவத்தாலாவது மற்றெதனாலாவது கட்டுப்படமாட்டான். எந்தக் கன்மத்தாலும் யோகியின் மனம் விகாரம் அடையாது. ஜனக்கூட்டத்தில் சஞ்சரித்தும், குதித்தும், ஆடியும், விளையாடியும், பாடியும் திரிவான். அவற்றால் அவன் யாதொரு கெடுதியையும் அடையான். இதுவே மோட்ச நிலையாகும். இதை யடைந்தவன் ஜீவன் முக்தனென்று சாஸ்திரங்கள் வியந்துகூறும். அறிவிற் சிறந்த பெரியோரும் புகழ்ந்து மகிழ்வார்கள்.

ஞானம்.

"தத்வமஸி" என்னும் வாக்கியார்த்தமாகிய ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய ஞானமே முத்திபெறுவதற்குக் காரணமாம். தைத்திரீய சுருதி ஞானமொன்றினாலேதான் முத்தி கிடைக்குமென்று கூறுகிறது. பிரமத்தை யறிந்தவன் எல்லாவற்றுக்கு மேலான அப் பிரமத்தை யடைவான். அந்தப் பிரமத்தின் சொரூபமாவது எக்காலத்துங் குறைவுறாத ஞானவடிவமாம். அது எங்கும் நிறைந்திருப்பதால் முடிவற்றதாயுள்ளது. இந்தப் பரம்பொருள் எல்லாவற்றினும் நிறைந்து நின்று அவை புணரும்படி செய்கிறது. அஃதின்றேல் பத்தாத்மா (பந்தத்தில் சிக்கிய ஆன்மா) ஒன்றையும் உணராது என அறிகிறவன், அந்த ஞான சொரூபத்துடன் ஒன்றிக் கலந்து சகல கர்ம பலன்களையு மடைவான். "சரீரங்களெல்லாவற்றிலும் சரீரமின்றியும் சரீரமில்லாத பொருள்களில் சரீரமுள்ளதுமாய் நிற்பதும், எல்லாவற்றுக்கும் மேலானதும், எங்கும் நிறைந்ததுமான இந்தப் பிரமத்தை யறிபவன் சோகத்தை யொழிப்பான். நல்லொழுக்கமுள்ளவன் அஃதில்லாதவன், பொறுமையுள்ளவன் அஃதில்லாதவன், மனத்தை யடக்கினவன் அடக்காதவன், இவர்கள் இந்தப் பிரமத்தை யடையமாட்டார்கள். பிரமஞானமொன்றே யதைப் பெறுவதற்குக் காரணமாகும். ஆதலால் அந்தப் பரமஞான மொன்றையே தேடிக்கொள்ளவேண்டும். ஆத்மா ஒருவனே எல்லாவற்றிலுமிருந்து நன்மையை யளிக்கின்றது என்று அறிகிறவன் குறைவற்ற சாந்தியைப் பெறுவான். இதைத்தவிர வேறில்லை" என்று கடவல்லி சுருதி கூறுகின்றது. முண்டகோபநிடதம் "கண்டமில்லாததும், ஞானவடிவானதும், முத்தியை யளிப்பதுமான பரமான்மா ஒன்றே சத்தியப் பொருளாதால் அறிஞர் அதனையே அறிவார்கள். அதனை விளக்கும் உபநிஷத்துக்களையே பயிலவேண்டும். இதையன்றி வேறு விவகாரங்களை விட்டொழிக்கவேண்டும். உலகத்தில் ஓடுகிற ஆறுகளெல்லாம் சமுத்திரத்தில் பாய்ந்து தத்தம் பெயர்களை ஒழித்துச் சமுத்திரமாகவே நிற்பதுபோலப் பிரமத்தை யடைந்த ஆன்மாவும் நாமரூபங்களொழிந்து பிரமமாகவே நிற்கும். பரமான பிரமத்தின் அபரோட்ச ஞானத்தை யறிகிறவன் பிரமமாகவே ஆய்விடுவான். இதில் சந்தேகமில்லை" என்று கூறியது.

அமிர்தபிந்தூபநிஷத் "மாயா சம்பந்தமற்றதும், கண்டமின்றி எங்கும் நிறைந்ததுமாயுள்ளதும், அசைவு முதலிய கிரியைகளில்லாததுமான பிரமம் நானே யென்று அறிகிறவன் அந்தப் பிரமமே யாய்விடுவான் என்பதில் சந்தேகமில்லை" என்று கூறியது. கைவல்லிய சுருதி "உமாகாந்தனும், எல்லாவற்றிற்கும் ஈசனும், எல்லாவற்றிற்கும் பிரபுவும், திரிநேத்திரனும், காளகண்டனும், மிகச் சாந்தனுமான இப்பொருளை விடாது தியானித்துச் சிந்திக்கிறவன் சர்வ பூதங்களுக்கும் சாட்சியைப்போல உதாசீனனாயிருந்து வரும் சிவமாகிய அந்தப் பிரமத்தையே அடைவான். ஆத்மா சர்வ பூதங்களிலுமுள்ளதாகவும், பூதங்களெல்லாம் ஆன்மாவினிடத்தில் ஆரோபிக்கப்பட்டதாகவும் நன்றாயுணர்ந்தவன் அந்தப் பொருளை யடைவானேயன்றி மற்றவன் அடையமாட்டான்" என்று கூறியது. ஜாபாலோபநிடதம்-"கண் காது முதலிய புற இந்திரியங்களை அடக்கினவனும், மனமுதலிய வுட்புலன்களை யடக்கினவனும், விஷயங்களில் உபேக்ஷையுள்ளவனும், சீதோஷ்ணங்களைச் சகித்திருப்பவனும், பேத புத்தியில்லாதவனும், மிகச் சிரத்தையுள்ளவனுமான ஞானி அகண்டமாகிய பரமான்மா நானேயென்று அறிந்துகொள்வான். ஒன்றாகவுள்ள ஆன்மா எல்லாவற்றிலும் வியாபகமாக இருப்பதால் அவன் அந்தப் பிரமமே யாவான்" என்று கூறியது. "நானே பரமான்மா"வென்று அறிகிறவன் உலகப் பொருள்களில் சிறிதும் ஆசைவைக்கமாட்டான். ஆதலால் ஒன்றைப் புசிப்பதற்காவது அதை விரும்பியாவது சரீரத்துக்குத் தொங்கி

ரவைக் கொடுக்கமாட்டான். "பிரமமென்பது சப்த ஸ்பரிசம் ரூபம் ஒன்றுமில்லாதது. ஆயினும் அது எக்காலத்துங் குறைவை யடையாது. ரஸம் கந்தம் இவைகளில்லாததாயினும் நித்தியமாகவும் ஆதியந்த மற்றதுமா யிருக்கின்றது. இந்தப் பிரமத்தைச் சிரவண முதலியவற்றால் அறிகிறவன் ஜனனமரண ரூபமான மிருத்யுவென்ற சமுசாரத்தினின்றும் விடுபடுவான். ஞானமென்ற நெருப்பானது சுபம் அசுபம் என்ற கட்டைகளை எரித்து ஒழித்துவிடுகின்றது" என்று வேறு சுருதிகள் கூறின. "சாஸ்திரங்களில் தேர்ந்த நல்லறிவுடையவன் கருமங்களினால் கட்டுப்படான். மெய்யறிவு பெறாதவனைத் துக்கங்கள் சூழ்ந்துகொண்டு பிரமத்தை யடையவிடாவாம். அவன் துக்க ரூபமான சம்சாரத்தில் புகுந்து நெருப்பினால் தகிக்கப்படும் வத்துக்களைப்போலச் சிறப்படையமாட்டான்" என்று மனு கூறினார். "நெருப்பு நாற்புறமுஞ் சூழ்ந்துகொண்டு கட்டைகளைத் தகிப்பதுபோல ஞானமாகிய நெருப்பு கர்மங்களை யெல்லாமெரித்துவிடும்" என்று பகவத்கீதையில் கண்ணன் கூறினார்.

சுருதிகள் கூறினவென்று யாமெடுத்துக்காட்டிய ஞானத்தைப் பக்தி சிரத்தையுடன் குருமுகத்தாலுணர்ந்துகொள்ளவேண்டும். ஞானோபதேசம் செய்கிற குருவைப் பரபிரம சொரூபமாகவே கருதி வழிபடவேண்டும். அந்தக் குரு பிரமஞானத்தை யடைந்தவரா யிருக்கவேண்டும். அங்ஙனம் தகுந்த குருவைத் தேடியடைந்து சோம்பலும் வெட்கமுமில்லாமல் பணிவிடைகள் செய்து, அவரை மனமுவப்பக்கண்டு அவரிடம் ஞானோபதேசம் பெறவேண்டும். அவ்வாறு ஆராய்ந்து செய்வதாலன்றிச் சாஸ்திர வாராய்ச்சியான்மட்டும் மெய்ஞ்ஞான முதிக்கமாட்டாது. இந்தப் பிரமஞானத்தைப் பெரும்பொருட்டே ஆன்மாவுக்கு மனித சரீரமுண்டாயிற்றென்று கருதவேண்டும்.

முற்றிற்று.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

ப்ரகாசமாகு.

மேல் நாட்டாரின் சேர்க்கையினால் நாம் அவர்களது குணங்களைக் கொஞ்சமாயும் தோஷங்களை அதிகமாயும் பின்பற்றி யிருக்கிறோம். நமது முன்னோர்களின் நாகரிகத்தின் முக்கிய உத்தேசமானது, ஆத்ம விசாரமும் ஆத்மலாபமுமாகும். அவர்கள் சீக்கிரம் சந்தோஷமடையக் கூடியவர்கள். அவர்களுக்கு வேண்டியவைகள் மிகவும் சுவல்பம். அவர்கள் சாதாரண ஆகாரம் சாப்பிட்டாலும் சாதாரண வஸ்திரம் உடுத்திக்கொண்டாலும் அவர்களது எண்ணங்கள் மேலானவைகளாக விருந்தன. அவர்களது அந்த மேலான எண்ணங்களின் காரணமாகவே அவர்களா லியற்றப்பட்ட எண்ணிக்கையற்ற கிரந்தங்கள் மூலமாக நாம் லாபமடைந்து வருகிறோம். மஹாபாரதம், ராமாயணம், ஷட்தர்சனம் (இதிஹாஸ் மீமாம்ஸாதி) உப

நிஷத், முதலிய கிரந்தங்கள் கோட், பூட் (Coat & Boot) அணிபவர்களால் செய்யப்பட்டவையல்ல, ஆனால் கோவணத்துடன் காட்டில் வசித்து தான்யங்களை உட்கொள்ளும் புலவர்களால் இயற்றப்பட்டவையே, அவர்களது இந்த சுய நலமின்மையை நாம் அடியுடன் மறந்துகொண்டு வருகிறோம். மற்றவர்களைப்பற்றி யென்ன? பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் படிக்கும் சிறுவர்களையும், புலவர்களையும் பாருங்கள். வெயில் நாட்களிலும் அவர்கள் சரீரத்தை மூடுவதற்கு 3 துணிகள் வேண்டி யிருக்கின்றன. எண்ணெய்யும் தைலமும் வேண்டும். சீப்பு கண்ணாடி யில்லாமல் அவர்கள் வேலைகள் நடைபெறமாட்டா. எந்த சவுக்காரம் என்னும் பெயரை நமது முன்னோர்கள் கேட்டே யிருக்கமாட்டார்களோ அந்த சவுக்காரம் இப்பொழுது இவர்களுக்கு மாதத்திற்கு எத்தனை கட்டிகளோ தேவையா யிருக்கின்றன. கல்வி கற்கும் பிரம்மசாரிகள் எவ்வித ஆடைகள் அணியவேண்டுமோ, எவ்வித நித்ய கர்மானுஷ்டானங்கள் செய்ய வேண்டுமென்று ஸ்ம்ருதிகளில் எழுதி யிருக்கின்றதோ, அதற்கு நேர் விரோதமாக இப்பொழுது பார்க்கிறோம். ஆத்மசக்தி குறைந்து கொண்டு வருகிறது. பாரதம்போன்ற ஏழை தேசத்திற்கு இதனால் ஏற்படும் கெடுதல் சொல்லத்தரமன்று. சாரமற்றதாயிருந்தும்கூட, எவர்கள் மோஸ்தரில் (Fashion) விழுந்து வீண்பணச் செலவு செய்கிறார்களோ அவர்களை ஒருவிதத்தில் பைத்தியக்காரர்கள் என்று சொல்லவேண்டும். ஏனெனில் புத்திமான் இல்லாவிட்டாலும் ஞானமுள்ள எந்த மனிதனும் பங்குனி சித்திரை மாதங்களில் பாரதபூமியைப்போன்ற உஷ்ண தேசத்தில் பூட்ஸ், கால் சட்டை, மேல்சட்டை, மேஜோடு (Stockings) டை, காலர், பனியன், ஷர்ட்டு, வேஸ்டு கோட் முதலிய உடை தரித்துக்கொண்டு உஷ்ணத்தினால் அவதிப்படமாட்டான். மனிதனுக்கு மரியாதை அவனது குணங்களால் ஏற்படுகிறது. கேவலம் துணிமணிகளால் இல்லை.

ஈசுவர் சந்திர வித்யாசாகர் மஹாதேவ கோவிந்தரானடே, லோகமான்ய திலகர் இவர்கள் வெளிவேஷத்தில் ஒன்றும் இல்லாவிட்டாலும் (சாதாரண மனிதர்கள்போல் ஆடை உடுத்தி யிருந்தாலும்) எவ்வளவு பூசிக்கத்தகுந்தவர்களா யிருந்தார்கள். அன்னியர்போல் ஆடை தரித்தலையும் அவர்களது நடவடிக்கை முதலியவைகளை பின்பற்றுதலை விட்டுவிடும்படியும், ஆடம்பரமில்லாம லிருக்கும்படியும், உயர்ந்த எண்ணங்களுடன் தனது ஆத்மாவை உன்னதமாகும்படியும் பாரததேசத்துத் தற்கால ஸ்திதி சொல்லிக்கொண்டிருக்கிறது.

சாதாரண உணவினால் சரீரம் புஷ்டியாகக் கூடுமானால் பஞ்சபக்ஷ்ய பரமான்ன ஸகிதம் உணவு சாப்பிட்டு வீணாக ரோகத்தினால் பீடிக்கப்படாதே. முறட்டு வஸ்திரம் குடுத்துணி உடுத்துவதால் சரீரப் பாதுகாப்பு ஏற்படுமானால் விலை யுயர்ந்த ஆடைகள் உடுத்தி ரூபாயைக் கரியாக்காதே. சுய நலப் பிரியர்களின் இவ்வித நடத்தைகளைப் பார்த்து சாதாரண ஜனங்களும் இவ்வித வீண்செலவு செய்வதால் தேசத்திற்கு மிகவும் கெடுதி ஏற்

படுகிறது. நீங்கள் ஸ்வராஜ்யம் விரும்புகிறீர்கள். நல்லது, முதலில் நீங்கள் ப்ரகாசமாகுங்கள். உங்கள் மனதை யடக்கியாளக் கற்றுக்கொள்ளுங்கள். பீடன், மோடார், தோட்டம், பங்களா, விலையுயர்ந்த வஸ்துக்கள் பணக்குவியல் இவைகளிருப்பதினுலேயே ஒருவனும் ப்ரகாசமாகமாட்டான். அதற்கு ஆத்ம சுத்தியும் ஆத்மவிசாரமும் வேண்டி யிருக்கிறது. ஆடம்பரமில்லாம விருப்பதினுலேயும், உயர்ந்த எண்ணங்களுட னிருப்பதினுலுமே ஆத்மசுத்தி உண்டாக முடியும்.

மேல் எழுதிய வியாசம் சென்னையில் பிரசுரமாகும் "ஹிந்தீப்ரசாரக்" என்னும் பத்திரிகையி லிருந்து நமதானந்தனுக்காக எடுத்தெழுதப்பட்டது.

பா. அ. சங்கர நாராயண சர்மா.

குறிப்பு:—இச் சுருக்கமான வியாசத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள், நம் தாய் நாடு பூர்வீக உன்னத நிலையை யடையவேண்டும், நம் சந்ததியார் முன்னேற்ற மடையவேண்டும் என்று கோரும் ஒவ்வொருவரும் நன்ருகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் — இவற்றை நன்கு கவனித்து மனதில் வைத்து இவற்றின்படி நடக்கும் அறிவாளிகளே பாரத புத்திரர் என்ற நாமத்திற்குத் தகுதி யுடையவர்களாவார்கள்.

பத்திரிகாசிரியர்.

பிழை திருத்தம்.

கடந்த ஐப்பசி சஞ்சிகையில் 148-வது பக்கம் உள்ள "S. V. தேவராஜ ஐயங்கார்" என்ற கையொப்பத்தை "S. V. வரதராஜ ஐயங்கார்" என்று திருத்திக்கொள்ளக் கோருகிறோம்.

பத்திரிகாசிரியர்.

மறுபிறப்பு.

நம்மவர்க்கோர் எச்சரிக்கை.

புரட்டாசி மாதம் வெளியான நமது சஞ்சிகையில் "மறுபிறப்பு" என்பதைப்பற்றி சீடன் என்பவர் எழுதிய வியாசத்தை யாவரும் வாசித்திருக்கலாகும். அதற்கு மறுப்பாக இலங்கை வாசியாகிய புலி—எம்—இஞ்ஞாசி பர்ணண்டஸ் என்ற கிருஸ்தவ ரொருவர் "மறுபிறப்பென்பது சிறுகிறுப்பே" என்ற தலைப்பெயரிட்டுச் சில ஆபாசங்களை யெழுதி யனுப்பினர். இந்தப் புலிதான் முன்பு 'நல்லாயன்' பத்திரிகையில் நாம் கிருஸ்து மதத்தைத் தூஷிப்பதாக அபாண்டம் கூறி, சில ஆபாசங்களை வரைந்து முடிவில் ஆனந்தபோதினியை எல்லா கிருஸ்தவர்களும் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தது — அந்தோ எல்லா கிருஸ்தவர்களும் இப்புலியைப்போலவே வீண் மதத்துவேஷமும் உண்மையை யேற்றுக்கொள்ளச் சம்மதியா மனமும் உடையவர்களா யிருந்தாலன்றோ அப்படி நடக்கும்.

'கர்மம் மறுபிறப்பு' என்ற கொள்கை நமது மதத்தில் ஒருவராலும் மறுக்க முடியாவிதமாய் நிலை நாட்டப்பட்டு, அனுபவமாய் மகான்களால் உண்மையென அறிந்து நிரூபிக்கப்பட்டு எண்ணிறந்த காலமாயின. மேல் நாட்டிலிருந்தவர்களிலும் இருப்பவர்களிலும் பாரபட்சமின்றி ஆராய்ச்சி செய்த அறிவாளிகளாகிய சாஸ்திரிகளும் அதை யொப்புக்கொண்டே யிருக்கிறார்கள். ஒப்புக்கொள்கிறவர்கள் இப்போது மிருக்கிறார்கள். அப்படியிருக்க மூர்தாநாள் முளைத்த கிருஸ்துமத சித்தாந்தத்தை நம்பி ஒருவர் அதைத் தமது குதர்க்கத்தால் மறுக்க முயல்வது நகைப்புக்கிடமன்றி வேறில்லை. அவற்றை நமது சஞ்சிகையில் பிரசுரித்துக் கண்டிப்பது வீண் ஆபாசமான வேலையன்றி வேறில்லை. நாணலைக்கொண்டு மலையை யசைக்க முயலும் புத்திசாலிக்கு நற்புத்தி புகட்டுவது வீண்வேலை. கிணற்றுத் தவளைக்கு யாவற்றினும் பெரிய கடல் ஒன்றிருக்கிறதென்று எவ்வளவு கூறினும் அது கிணற்றிலேயே கிடக்குமட்டும் அந்த உண்மையை நம்பாது. நிரூச்சுரவாதியோடு எப்படி வாதம் செய்யலாகாதோ அவ்வாறே இத்தகைய வீண் வாதக்காரரோடு வியவகாரம் வைத்துக்கொள்ளலாகாது—இத்தகைய மறுப்புக்குச் சமாதானம் கூறி இனிமேலா மேற்கண்ட மறுபிறப்புச் சித்தாந்தம் நிலை நிறுத்தப்படப்போகிறது? அதன் உண்மையைப் புரட்டாசி சஞ்சிகையில் பூரணமாய் நாம் வெளியிட்டிருக்கிறோம்.

இப்போது நம்மவர்க்கு நாம் எச்சரிக்கை செய்வதாவது — கிணற்றுத்தவளை தன் எல்லைக்குள் "இக்கிணற்றைவிடப் பெரிய நீர் நிலை யில்லை. கடல் உண்டென்பது பொய்—நம்மவரில் யாரும் அதைக் கண்டதில்லை" என்று பறை யறைந்துகொண்டு களிக்கட்டும்—நாம் அதைச் செவி யேற்கலாகாது. பொருட்படுத்திக் கவனிக்கவுமாகாது என்பதே. இத்தகைய விஷயங்களில் செலவிடுங் காலம் மிக வீணுக்கப்பட்டதே யாகும். நாம் அவ்வீண் விஷயத்தை வெளியிடாததற்குக் காரணங்கூற இவ்வளவேனும் வரைய நேர்ந்தது. மற்றபடி ஆனந்தபோதினியின் சிறுபாகத்தையேனும் இதற்காக விட நேர்ந்ததற்கு விசனமே.

பத்திரிகாசிரியர்.

பகவத்கீதை வசனம்.

(155-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏ பார்த்த ! இடைவிடாது பரமான்மாவையே சிந்திக்கும் அப்பியாசமுடையதும், அன்னிய ஜடசம்பந்தமான விடயங்களில் செல்லாததுமான மனத்தால் ஒருவன் பரமான்மாவான திவ்விய புருஷனையே யடைகிறான். நதிகள் தமது நாமரூபங்கள் குணங்கள் யாவும் இழந்து கடலில்கலந்து ஏகத்துவத்தை யடைவதுபோல் அவன் அந்தரியாமியாகிய பரமபுருடனை அபேதமா யடைகிறான்.

(அர்ச்சுனனது ஏழு கேள்விகளுக்கும் விடையருளிய பகவான் அதிகாரிகளடைதற்குரிய அப்பரம புருஷனது விசேடணங்களை அருளிச் செய்கின்றார்.)

ஏ பார்த்த! கருமயோகத்திலும் ஞானயோகத்திலும் செல்லத் தகுதியுடைய சித்தத்தைப் பரமாத்மாவின்பால் நன்றாய்ச் செல்லும்படி செய்து வேறொரு விஷயத்தையு மடையாதோர், சூரியமண்டலம்போல் விளங்கும் பரமான்மனை யல்லாது வேறொன்றினையு மடையார்கள். அப்பரமான்மாவின் சுபாவத்தையும் அவரை யடையும் விதத்தையும் இனிக்கூறுதும் கேட்பாயாக.

திரிகாலங்களிலு முள்ள எல்லா வஸ்துக்களையும் அறியும் சர்வக்ஞனும், அநாதியாயுள்ளவனும், யாவற்றையும் தன் ஆணைவழி நிறுத்துபவனும், சூக்கும பதார்த்தங்களுக்கெல்லாம் அதி சூக்குமமாயுள்ளவனும், (பிராணிகளின் கர்மங்களுக்குத் தக்கபடி) எல்லா பயன்களையும் அளிப்பவனும், யாவர்க்கும் சிந்திக்க வரிதானவனும், எங்குமுள்ள இருளை நீக்கிய இளஞ் சூரியன்போல் பிரகாசமுடையவனும் ஆகிய இத்தன்மைய பரம புருடனை அடைதற்குரிய அன்புடையவர்கள், மரணகாலத்தில் ஏகாக்கிர சித்தத்தோடு புருவமத்தியில் தமது பிராணவாயுவை நிறுத்தித் தேகத்தினின்றும் வெளிப்படுவார்களாயின், இந்த யோகத்தால் அந்தப் பரம புருஷனோடு பொருந்துவர். அதன் பொருளை யின்னமும் கூறுவோம் கேட்பாயாக.

(தியானகாலத்தில் ஏதேனும் ஒரு நாமத்தால் சிந்திப்பதோ அல்லது இன்ன நாமத்தால்தான் சிந்திக்கவேண்டுமென நியமமுளதோ என்றுண்டாகும் சங்கையை யொழிக்க, பிரணவ மந்திரத்தாலேயே சிந்திக்க வேண்டுமென பகவான் அருளிச் செய்கின்றார்.)

ஏ அர்ச்சுன! வேத முணர்ந்தவர்கள் எந்தப் பிரணவத்தை அழியாததென்று போற்றுகின்றனரோ, எந்தப் பிரணவத்தை ஆசையை யொழித்த யோகிகள் அடைகின்றனரோ, எந்தப் பிரணவத்தை யடைய விரும்பினவர்கள் காமாதிகளை யிழந்து பிரம்மசரியத்தை யநுஷ்டிப்பார்களோ, எந்தப் பிரணவம் பரம்பொருளே யாகுமோ அதைச் சுருக்கமாகக் கூறுதும் கேட்பாயாக.

ஏ பார்த்த! எவன், சுரோத்திரம் முதலிய ஐந்து இந்திரியங்களையும் சத்தம் முதலிய தத்தம் விடயங்களைக் கிரகிக்க வொட்டாது செய்து மனதை இருதயத்தில் நிறுத்தி, பிராணவாயுவைச் சிரசிலேறும்படிச்செய்து யோகத்திலிருந்து, ஏகாக்ஷரமாகிய பிரணவத்தை யுச்சரித்துக்கொண்டு, மனம் வேறொரு நாட்டமுமின்றி என்னையே சிந்தித்துக்கொண்டு தேகத்தைவிட்டு நீங்குகிறானோ, அவன் நித்தியமான என்னையே யடைவான்.

இப்போது கூறியபடி ஒருவருடம் ஆறுமாதம் என்று காலவரையெண்ணாமல் எப்பொழுதும் பரமேசுவரனாகிய எனது சொரூபத்தை சிந்தியா நிற்கும் புருஷர்களுக்கு நான் சுலபமாகக் கைவசமாவேன். அத்தகையோர் நாசமுடையதாகிய ஜன்மத்தை யடையமாட்டார்கள். (அதாவது, அத்தகையோர் பிரம்மலோகமடைந்து மேலான போகங்களை யனுபவித்து, முடிவில் பிரம்மஞானமடைந்து கைவல்ய முத்தி யடைவார்களாதலால் பிறப்பதும் மறிப்பதுமாகிய இக்கன்ம ஜன்மத்தை யடையார்கள் என்பதாம். அவர்கள் பிரம்ம லோகத்தில் சுத்தமான அந்தக்கரணமுடையவர்களாகச் சேர்வதால் பிறப்பு இறப்பிற்குக் காரணமாகிய கர்மங்களில் பிரவர்த்தியார்கள்.)

(இப்போது பகவான் மேற்கண்டவாறு பிரமலோக மடைவோர் மட்டுமே மீண்டும் ஜனியா நெறியடைவார்களென்றும், பரமேசுரத்தியானமில்லாமலும் ஆன்மசாட்சாத்கார மடையாமலும் பிரமலோக மடைவோர் மீண்டும் ஜனிப்பர் என்பதைப்பற்றியும் அருளிச்செய்கின்றார்.)

ஏ பார்த்த! தம்மால் முன் ஜன்மத்தில் செய்யப்பட்ட வினைகள் அநுபவித்துத் தீர்ந்தபோது பிரம்மலோக மடைந்தோரும் மறுபடி ஜனிப்பார்கள். என்னை யடைந்த புருஷரே மீண்டும் பிறவாத நெறியை யடைந்தோராவர்.

(பிரம்மலோகமடைகிறவர்களில் இருவிதமுண்டு. பகவான் கூறியபடி ஈசுர உபாசனையா லடைபவர்கள் ஒரு சாரார். அவர்களே மீண்டும் பிறப்பிறப்படையாமல் பிரம்மஞானம் பெற்று முத்தி யடைவோர். இவ்வாறு அடையும் முத்திக்கு கிரமமுத்தி என்று பெயர். மற்றொரு சாரார் யாக எக்யாதிக் கிரியைகளால் பிரம்மலோக மடைவோர். இவர்கள்தான் மீண்டும் ஜனிப்பார்கள்.)

பிரம்மலோகம் முதலிய சர்வ உலகங்களும் காலத்தால் பரிச்சின்னப்படுபவை. அதாவது நம்மைப்போல் ஆயுள் நிர்ணயமுடையவை. அந்த காலம் முடிந்தால் அவை நசிக்கும். அந்த ஆயுள் பிரமாணம் பின்வருமாறு:—

சதுர்யுகம் ஆயிரமாயின் பிரம்மாவிற்கு ஒரு பகலாம். அவ்வாறே ஆயிரம் சதுர்யுகம் ஓர் இரவாகும். அதாவது 2000 சதுர்யுகம் பிரம்மாவிற்கொருநாள். இப்படிப்பட்ட நாட்கள் 15 கொண்டது ஒரு பட்சம். 2 பட்சம் 1 மாதம். 12 மாதம் ஒருவருடம். இத்தகைய நூறு வருடம் பிரம்மாவுக்கு ஆயுளாகும். அதன் முடிவில் பிரம்மா நாசத்தை யடைவர்.

இந்திராதி தேவதைகள் பிரம்மாவினும் குறைந்த ஆயுளுடையோராவர். பிரம்மாவின் ஒரு பகலே இவர்களுக்கு ஆயுளாகும். இரவு அவ்வுலகங்களுக்குப் பிரளயமாம். ஆகையால் இவர்களும் இவர்கள் போகங்களும் அநித்தியமே. இதனால் இவ்வுலகங்களிற் செல்வோரனைவரும் மீண்டும் ஜனித்தே தீரவேண்டும் (மேலே கூறியபடி கிரமமுத்தி யடைவோர் தவிர) என்றுணரற்பாலது. (தொடரும்) ஈடன்.

பொறுமை.

பொறுமை என்றால் சாந்தம், அமைதி என்று பொருள்படும். இது மாந்தரிடத்தில் அமையவேண்டிய இன்றியமையாத குணங்களில் ஒன்று. கோபத்தை யறவே யொழித்தவர்க்குத்தான் அதிசுலபமாகப் பொறுமை ஏற்படும். எப்போது பொறுமை ஏற்பட்டதோ அப்போதே நாம் சுகம் அடைந்த மாதிரிதான். நாம் செய்யப்புகும் ஒவ்வொரு காரியத்தையும் பொறுமையோடே செய்தல்வேண்டும். அவசரப்பட்டுச் செய்யலாகாது. அப்படிச் செய்யின், காரியம் விக்கினமாய் முடியும். அதனால் நாம் மனதில் கோரிய எண்ணம் பூர்த்தியாகாமல் முடிகிறது. அதனால் மனத்தாங்கல் உண்டாகும். அப்போது நொந்துகொள்வதில் பயனில்லை. பொறுமையோடு செய்தால் சகலமும் கைகூடும். எவ்வளவு கஷ்டங்கள் தோன்றினும், இறுதியில் சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்துவிடும். அப்படி யாராகிலும் பொறுமையினால் பிரக்கியாதி பெற்றிருக்கிறார்களா என்று விசாரிக்கப்புகின், பொறுமையே பூஷணமாகக்கொண்ட கீழ்வரும் சிகாமணிகள் சரித்திரங்களா லறியலாம்.

முதலாவது அரிச்சந்திரன் தனக்கு விஸ்வாமித்திரரால் ஏற்பட்ட சகல கஷ்டங்களையும், — அதாவது பதியிழந்தார், பாலனையிழந்தார், நிதியிழந்தார், போகங்கள் யாவுமிழந்தார், ஆகிய இவைகளை — பொறுமையுடனே சகிக்கவில்லையா? ஆனால் சத்தியமும் பொறுமையும் மாத்திரம் இழக்கவில்லையல்லவா! இறுதியில் சத்தியமும் பொறுமையும் பழைய நிலைமைக்கு அவரைக் கொண்டுவந்து விடவில்லையா?

இரண்டாவது ஸ்ரீ ரகுநந்தனர் தன் தந்தையின் கட்டளைப்படி பதினான்கு வருஷங்கள் பொறுமையோடு ஆரண்ய வாசஞ் செய்யுங்காலை, தமது சீதையையுமிழந்து பொறுமையோடு சொல்லொணா துன்பப்பட்டு இறுதியில் உயர் வெய்தின ரன்றோ! மற்றும், பரதன், தன் தாய்தான் ஸ்ரீராமரைக் காட்டிற்கனுப்பினதற்குக் காரணம் என்றறிந்தவுடன், உடல் பதைத்து, அவளைத் திட்டுகையில், அப்போது ஸ்ரீராமர் தடுத்து பரதனைப் பொறுக்கும்படி செய்து நீதிகளைப் புகன்று சித்திரகூடம்விட்டு அகன்றன ரன்றோ. பொறுமையே அவதாரமாகக் கொண்டவரன்றோ ஸ்ரீராமபிரான். இன்னும் இவர் கஷ்டகாலங்களிலும், தனக்குக் கோபமூட்டினவர்களிடத்தும் எப்படி பொறுமையே பூஷணமாகக்கொண்டு காரியசித்தி பெற்றார் என்பதை இராமாயணத்தில் பல இடங்களில் தெளிவாய்க் காணலாம்.

மூன்றாவது மஹா பாரதத்தில் தருமநந்தனரைப்போல் பொறுமையே பூஷணமாகக் கொண்டவர் வேறொருவருங் கிடையாது. சூதாட்டத்தில் யாவும் இழந்தது கண்டு தம்பிமார்களுள் பீமன் மிகவுஞ் சீற்றங்கொண்டு, அண்ணனைப் பார்த்து, உத்திரவு கொடுத்தால் உடனே துரியோதனாதியரைத் துவம்சப்படுத்துவதாய்க்கேட்க, அதற்குத் தருமர் தடுத்து பொறுமையுடனிருக்கவேண்டுமென்ன, அதே பிரகாரம் பன்னிரண்டு வருஷங்

கள் ஆரண்யவாசங் கடந்து ஸ்ரீகண்ணபிரானுடைய சகாயத்தால் கௌரவர்களைச் செயித்து பூபாலனஞ் செய்தனரன்றோ. "பொறுத்தவர் பூமியாள்வர், பொங்கினவர் காடாள்வார்" என்பதற்குப் பாண்டவகௌரவர்களே இலக்காக நின்றனர். இறுதியில் பொறுமையே வென்றது.

"சாந்தமு லேக சௌக்கியமு லேது" என்று ஸ்ரீமத் தியாகராஜஸ்வாமிகளும் பாடியிருக்கிறார். பொறுமையின் குணத்தைப் போற்றலரிது. இதை நாம் தினந்தோறும் பழக்கிக்கொள்ளவேண்டும். ஒரே நாளில் வருவதல்ல. பொறுமையோடிருந்து வாழவேண்டும். இத்தகைய பொறுமையின் அளவுதான் என்ன என்று கேட்பீர்களோ, அந்தோ, அதன் அளவு

"பொறுமை கடலினும் பெரிது" என்று ஆன்றோரருளினர். எல்லாம் வல்ல இறைவன் இப்பொறுமையை நமக்கு பூஷணமாக அளிப்பாராக.

பூ. அமிர்தலிங்கம். சென்னை.

வாழை மரம்.

இந்நாட்டில் வாழை, தென்னை, கரும்பு முதலியவைகளைச் சாகுபடி செய்யத் தகுந்த ஆறுகள், ஏரிகள், குளங்கள், நீரோடைகள் முதலிய நீர்நிலைகளிருப்பதன்றி, சாகுபடி செய்யத் தகுந்த பூமிகளுமிருக்கின்றன. இங்கே நாம் வாழையின் சாகுபடியைப்பற்றிக் கூறுவோம்.

வாழையின் வகைகள்:—இவ்வுலகில் அநேக விதமான வாழைகளுண்டு. ஆனால்; நம்மவர்களுக்கு நன்கு தெரியும்படியானதும், சுலபமாக அகப்படக்கூடியதும்; மிக உபயோகமானதுமான சிற்சில வகைகளைப் பார்ப்போம். அவைகளாவன:— மொந்தன், இரஸ்தாளி, பேயன், பூவன், பச்சைநாடன், கறுவாழை, செவ்வாழை, பச்சைவாழை, தேன்வாழை, கொட்டைவாழை, சிறுமலைவாழை, பனைவாழை எனப்படும்.

வாழை சாகுபடிசெய்யத் தகுந்தபூமி:—வாழை அநேகமாய் உஷ்ணப் பிரதேசங்களிலேயே பயிராகும். அன்றியும், களிமண் மணல் இந்த இரண்டு மண்ணுங் கலந்த ஈரக்கசிவுள்ள விடங்களில் பயிராகும். ஆற்றுப் படுக்கையில் பயிராகும். ஏரிக்கரைகளில் பயிராகும். ஆற்று வண்டல் இந்த வாழைக்குத் தகுந்த எருவாதலால், ஆற்றங்கரைகளிலுள்ள வாழைகள் மிகவுஞ் செழுமையாகப் பயிராகும். அதிகமான காய்களும், ஒவ்வொரு காய்களும் மிகப்பருத்து மிருக்கும். ஒவ்வொரு வாழையின் அடியில் பல கண்கள் வெடிக்கும். அதிக காலம் நீடித்து அழியாதிருக்கும். சிலர் வாழைகளை நஞ்சை நிலத்தில் சாகுபடி செய்கின்றார்கள். பசுமை மண்ணுள்ள பூமியில் வாழை சாகுபடி செய்வது மிகவும் நலம். பேயன் வாழை, கொட்டைவாழை, இவைகளைச் சாம்பல் மண்ணில் சாகுபடி செய்யலாம்.

வாழை சாகுபடி செய்யத்தகாத பூமி:—பெருமணல் அல்லது சலக்கை மணல் உள்ள பூமிகளிலும், மிகக் கடினமான களிமண்ணுள்ள நிலங்களிலும், கப்பி மண்ணுள்ள விடங்களிலும் வாழை பயிராகாது.

வாழை சாகுபடிசெய்யப் பூமியைச் செப்பனிடுதல்:—எந்த விடத்தில் வாழைகளைப் பயிர் செய்யவேண்டுமோ அவ்விடத்தை ஓர் கெஜ ஆழந் தோண்டி மண்ணை மிருதுவாக்கி, மேடாக உயர்த்திச் சமப்படுத்தவேண்டும். பிறகு பத்தடிக்கு ஒவ்வொரு குழிகள் வீதம் தோண்டவேண்டும். ஒவ்வொரு குழிகளும் இரண்டடி நீளம் இரண்டடி அகலம் இரண்டடி ஆழம் இருக்கவேண்டும். அந்த நிலத்தில் இருபதடிக்கு ஒருதரம், ஆறடி அகலம் எழடி ஆழமுள்ள கால்வாய்கள் (கிடங்குகள்) வெட்டவேண்டும். அதிகமாய் அந்த கிடங்குகளில் ஜலம் வந்துவிட்டால் அந்நீரை வடிகட்ட ஓர் வழி (வடிக்கால்) யும், ஜலம் வர (நீர்பாய்ச்சல்) ஓர் வழியும் எற்படுத்தவேண்டும். அந்தக் கிடங்குகளில் கொஞ்சம் ஜலமிருக்கவேண்டும். அதிக ஜலமிருந்தால் வாழைகள் அழுகிவிடும். ஆனதால் கிடங்குகளில் மித ஜலமிருக்கும்படி ஜலம் விடவேண்டும். மித ஜலம் விடுவோமாயின் வாழை மிகவுஞ் செழுமையாக வளரும். தக்க லாபமும் கிடைக்கும்.

வாழைக் கன்றுகள் தயார் செய்தல்:—கன்றுகள் மூன்றடி முதல் நாலரையடி வரையில் உயரமாக விருக்கும்போதே கிழங்குகளுடன் பெயர்த்துவிட வேண்டும். பிறகு தலையை அறிந்துவிட வேண்டும். அப்படிக் கன்றை அறிந்து நடுவதால் கன்றுகளுக்குப் பல மதிகம். கிழங்குகளிலிருக்கும் வேர்கள் போகும் வண்ணம் சீவி விடவேண்டும். அக்கன்றுகளை மூன்று நான்கு நாள் ஆறவைக்கவேண்டும். பெயர்த்தவுடன் நட்டால் வேர் அழுகிவிடும். கன்றே முளைப்பது அரிதாகும். ஆனால், "வாழையை அன்று வை அல்லது கொன்று வை" என்ற பழமொழிப் போல கன்றைத் தோண்டி யெடுத்தவுடன் தலையை அறியாது, இலைகளோடு நட்டு ஜலம் விட்டால் நன்றாகப் பயிராகும். மேல் சொன்னதைக் காட்டிலும் இவ்வழியாக நடுவது உசிதமில்லை. வாழைக்கன்றின் கிழங்குகளைக் கரையான் அரிக்காது பாதுகாத்து வரவேண்டும்.

வாழை சாகுபடிசெய்யத் தகுந்தகாலம்:—கார்த்திகை, மார்கழி, இம் மாதங்களில் வாழை பயிரிடவேண்டும். அதிக ஈரமில்லாத சாம்பல் மண்ணில் வாழைகளைப் பயிர்செய்ய எண்ணினால் ஆடி மாதத்தில் பயிர் செய்யலாம்.

வாழைக்கன்றுகளை நடுதல்:—வாழைக்கன்றுகளை அதிக நெருக்கமாய் பயிர் செய்தால், செழுமையாகப் பயிராகாது. சோகைப்பிடித்துவிடும். ஐந்நூறு கன்றுகளை விசாலமாகப் போடக்கூடிய ஓர் பெரிய தோட்டத்தில் ஆயிரம் கன்றுகளை நட்டுப் பயிர் செய்தால், ஆயிரங் கன்றுகளிலிருந்து வரக்கூடிய லாபத்தைக் காட்டிலும் ஐந்நூறு கன்றுகளினால் அதிக லாபம் வரும். தோட்டமும் சீக்கிரமழியாது. ஆனதால் ஒவ்வொரு

கன்றுக்கும் பத்தடி வித்தியாசமிருக்கவேண்டும். வாழைக்கன்றுகளைப் புதைத்தவுடன் குளங்களிலுள்ள பொருக்குகளைப் போட்டுக் கன்றுகளைச் சுற்றி அணைக்கவேண்டும். இதனாலும், பத்தடிக்கு ஓர் கன்று வீதம் நடுவதாலும், அந்தக் கன்றுகள் அதிகமான ஆகாரத்தை யெடுத்துக்கொண்டு முதல் தரமான சிங்கங்களை வெளிவிடுகின்றன. முதல் தரமான குலைகளையும் தள்ளுகின்றன. வாழைத் தோட்டங்களில் இந்த வாழை சாகுபடியேயன்றி இஞ்சி மஞ்சள் கருணை முதலிய கிழங்கு வகையறுக்களையும் பயிர் செய்யலாம்.

வாழை பயிராகப் போடும் எரு:—தார்போட்ட வாழை மரங்களை வெட்டாது, அழுகவைத்து, பூமியுடன் கலந்து விடுதல்; இது எருவாகும். ஆற்று வண்டல் மண், குளத்துப் பொருக்கு, புல்பூண்டுத் தழைகள், இவைகளே நல்ல எருவாகும். இந்த எருவை உபயோகிப்பதால் வாழைக் கன்றின் கிழங்குகள் பருத்து செழுமையாக விருக்கும். அதன் காய்கள் பருத்து மிகுந்த இனிப்புடையனவாக விருக்கும். தக்க விலைக்கும் விற்கும் ஆற்று வண்டல் போடுவதாலும், அழுகிப்போன வாழையின் எருவாலும் வாழைகள் நீண்டகாலம் அழியாதிருக்கின்றன. (தொடரும்)

கூறைநாடு எஸ். என். ராமு. (கற்பகம்)

சோம்பேறித்தனமும் உழைப்பும்.

மனிதனாகப் பிறந்த எல்லோரும் நெற்றிவியர்வை நிலத்தில் விழ பிரயாசப்பட்டே ஜீவனஞ்செய்யவேண்டும். நமது உணவுக்கும் இன்னும் இதர செளகரியங்களுக்கும் வேண்டியவைகளை யெல்லாம் கடவுள் உண்டாக்கி யிருக்கிறார். ஆனால் நாம் வேலை செய்யாவிட்டால் அவைகளை யடைய முடியாது. தானியங்களை விதைத்துத்தான் அறுவடை செய்யவேண்டும். டலோகங்களைப் பூமியிலுள்ள சுரங்கங்களிலிருந்து வெட்டி யெடுத்துத்தான் நமக்கு வேண்டிய சாமான்களைச் செய்து கொள்ளவேண்டும். உரோமம் பஞ்சு முதலியவைகளை நூற்றுத்தான் பிறகு நெய்யவேண்டும். ஒவ்வொருவரும் வேலை செய்யாமல் சும்மாவிருந்தால் நமக்குக் கட்டிக்கொள்ள உடைகள் கிடைக்கா, பசிக்கு ஒரு விதமான ஆகாரமுங் கிடைக்காது, வசிக்க வீடுங்கிடைக்காது. ஆகையினால் நாம் வேலை செய்யும்பொழுது ஒருவிதமான ஆசையும், செய்தான பிறகு திருப்தியும் சந்தோஷமும் உண்டாகும்படியாக கடவுள் செய்திருக்கிறார். ஒருவேலையு மில்லாமல் வெட்டியாய் உட்கார்ந்திருப்பதைப் போல வேறொன்றும் நமக்கு விசாரத்தையும் அதிருப்தியையுங் கொடுக்கக் கூடியது இல்லை.

சாதாரணமாய் நாம் தினந்தோறும் பார்க்கிற ஒவ்வொரு சாமானும் உழைப்பினாலேயே வந்திருக்கிறது; யாராவது நமக்காக வேலை செய்

திருக்கவேண்டும். இல்லாவிடில் அந்தச் சாமான்களை நாமடையமுடியாது. காகிதமும், பேனா, மசி முதலிய எழுதுவதற்குபயோகமாயுள்ள கருவிகளுங்கூட மனிதர்கள் கஷ்டப்பட்டதனாலேயே கிடைத்திருக்கின்றன. மானிடராகப் பிறந்த நாம் ஒரு கூட்டமாக வசித்து வருகிறோம். நம்மில் ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு விதமான வேலையைச் செய்துவர வேண்டுமென்று நாம் நம்முள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். இவ்வாறாக நாம் ஒருவருக்கொருவர் வேண்டும்பொழுது உதவுகின்றோம். ஜனங்கள் நாகரீகமடையவே அவர்களுக்குத் தேவையான சாமான்களும் அதிகமாயின; ஆனால் ஒருவனே வேலைசெய்து அவனுக்குத் தேவையான எல்லாச் சாமான்களையும் சம்பாதித்துக் கொள்ளுதல் முடியாத காரியமாயிற்று. ஆகையினால் எல்லாருமாகச் சேர்ந்து அவரவர்களால் முடிந்த வேலையைச் செய்து ஒருவருக்கொருவருதவி வந்தனர். இம்மாதிரியாக வியவசாயிகள் நிலத்தை உழுது விதைதெளித்து தானியங்களை விளைந்தவுடன் அறுவடைசெய்து நமது ஆகாரத்திற்குக் கொடுக்கிறார்கள். தவிர, சேணியர் நமக்குவேண்டிய ஆடைகளை நெய்துகொடுத்தும், கொத்தர் நமது வீடுகளைக் கட்டிக்கொடுத்தும், தச்சர் மேஜை, நாற்காலி முதலிய சாமான்களைச் செய்து கொடுத்தும், வண்ணான் துணிகளைச் சுத்தமாய் வெளுத்துக்கொடுத்தும், உபாத்தியாயர் நமது சிறுவர்களுக்குப் பாடஞ்சொல்லிக்கொடுத்தும், போலீசார் நமது சொத்துக்களைப் பாதுகாத்துக் கொடுத்தும், நியாயாதிபதி நமது வழக்குகளைத் தீர்த்துக்கொடுத்தும், வைத்தியர் நமது தேகஸ்திதி கெடாமல் பாதுகாத்தும் இவ்வாறாக இன்னும் பல வகுப்பினர் பல காரியங்களைச் செய்துகொடுத்தும் உதவுகின்றனர். நாமும் மனித வர்க்கத்தினர்களாகையினால் நம்மைச் சேர்ந்த கூட்டத்தினர்களுக்கு நம்மாலியன்றமட்டும் நாமும் வேலைசெய்து உதவி வர வேண்டும்.

இவ்வுலகத்தில் பொதுவாகப் பிறர் கஷ்டப்பட்டு வேலை செய்த சாமான்களை வைத்துக்கொண்டு ஒருவன் தான் ஒரு வேலையுஞ் செய்யாமல் சுகமாகக் காலங்கழிப்பதென்பது கூடாது. ஒருவன் வியாதியாயிருந்தாலுஞ் சரி, அல்லது அவனது சரீரத்திலுள்ள அவயவங்கள் பின்னப்பட்டிருந்தாலுஞ்சரி, அவன் வேலை செய்யாதிருந்தால் அவனைச் சேர்ந்தவர்கள் அவனைக் கோபித்துக்கொள்ளமாட்டார்கள். ஆனால் தேக சௌக்கியமுள்ள ஒருவன் சோம்பேறியாயிருந்தால் உலகம் சம்மதியாது. இத்துடன்கூட அவனது சோம்பேறித்தனமே அவனுக்குத் தண்டனை விதிக்கும். சோம்பேறியாயிருந்தால் மனம் துருப்பிடித்துப்போம். ஆனால் ஒருவன் சதா உழைத்துக்கொண்டேயிருப்பானாயின் அவன்மனம் மேன்மேலும் விருத்தியடையும். நாம் எப்பொழுதும் உபயோகப்படக்கூடிய வேலையேதேனுமொன்றைச் செய்துகொண்டிருக்கவேண்டும். இல்லாவிடில் சோம்பேறியாயிருக்கும் நம்மைச் சைத்தான் பிடித்து கொடிய பல விஷயங்களைச் செய்யுமாறு நம்மைத் தூண்டும். நாம் ஒரு வேலையுமில்லா

மற் சும்மாவிருந்தால் கொடிய எண்ணங்கள் பல நமது மனத்திலுதிக்கும். நமது மனமானது சதா வேலைசெய்துகொண்டேயிருக்கிறது. நாம் தூங்கும்பொழுதுகூட நமது மனம் சும்மாவிருப்பதில்லை. நாம் நல்ல வேலைகளைச் செய்து நமது மனதில் நல்ல எண்ணங்களுதிக்கும் வண்ணம் செய்துகொள்ளவேண்டும். இல்லாவிடில் கெட்ட எண்ணங்கள் பல உதித்து நம்மைக் கெட்ட வழியில் திருப்புமென்பதிற் சந்தேகமில்லை. சோம்பேறித்தனமுள்ள ஒருவன் இவ்வாறாகக் கெட்ட எண்ணங்களால் கவரப்பட்டுத் தன்னாயுள் முழுவதும் கஷ்டப்பட்டுக்கொண்டேயிருப்பான்.

சுறுசுறுப்பாயிருக்கும் தன்மையே நல்ல அதிட்டத்திற்குத் தாயார். உழைப்பாளிக்குக் கடவுள் சகல சம்பத்தையுங் கொடுத்துதவுகிறார். இவ்வுலகிலுள்ள ஜனங்களில் எத்தேசத்தினர் மிகுதியாக உழைத்துப் பாடுபடுகின்றனரோ அத்தேசத்தினரே பணக்காரராயும் அதிகாரமுடையவராயுமிருக்கின்றனர். இங்கிலாந்து, பிரெஞ்சு, ஹாலண்டு, ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள ஜனங்கள் மிகுதியாக உழைத்துச் சம்பாதித்தே முன்னுக்கு வந்திருக்கின்றனர். இந்தியாவிலுள்ள ஜனங்கள் பயிர்த்தொழில் செய்வதில் ஆயிரத்தில் ஒருபங்குகூட இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் செய்வதில்லை. அப்படியிருந்தும் அவர்கள் இந்தியர்களைக் காட்டிலும் நூறுமடங்கு பணக்காரர்களாயிருக்கிறார்கள். இந்தியாவைப்போல பயிரிடுவதற்குத் தகுதியான தேசம் இப்பூலோகத்தில் வேறெங்குங் கிடையாது. கடவுள் தகுந்த எல்லா வசதியுமேற்படுத்தியிருக்கிறார்; அப்படியிருந்தும் கேவலஸ்திதியிலிருந்த ஐரோப்பியர்கள் நம்மைவிடப் பன்மடங்கு பணக்காரர்களாயிருப்பது ஆச்சரியமாகவேயிருக்கிறது. ஏன்? இந்தியர்கள் ஐரோப்பியர்களைப்போல் தேகசிரமப்பட்டு வேலை செய்வதில்லை. நல்ல அதிட்டமும் கெட்ட அதிட்டமும் நம்மாலேதானேற்படுகின்றன. நல்வாழ்வு முழுதும் நம்முடைய உழைப்பினாலேயே கிடைக்கிறது. நாம் ஏழைகளாகவிருந்தாலாவது அல்லது வேறு எந்த விதத்திலாவது நாம் கஷ்டப்படும்படியாக நேரிட்டால் நாமதற்காகக் கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும். ஏனென்றால் நாம் ஏழையாயிருந்தாலும் செல்வவந்தராயிருந்தலும் சோம்பேறியாயிராமல் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டும்.

பலர் மிகவும் ஏழைகளாகவிருந்து பிறகு அவர்களுடைய உழைப்பினால் மிகுந்த பணக்காரர்களாகி உன்னத பதவியையடைந்திருக்கிறார்கள். ஒரு மனிதன் சிறப்படைவதற்கு உழைப்பும் அழிந்துபோவதற்கு சோம்பேறித்தனமும் முக்கிய காரணமாயிருக்கின்றன. ஆகையினால் நாமெல்லாரும் நன்றாகக் கஷ்டப்பட்டு வேலைசெய்து வரவேண்டும்.

கே. யஸ். சுப்ரமண்யம். (முன்னங்குடி.)

அம்பாலிகை அல்லது அதிசய மரணம்.

(159-ம் பக்கத் தொடர்ச்சி.)

3-வது அத்தியாயம்.

சற்று உயரமானவனும் நல்ல தேகபலமுமுடையவனுமான ஒரு வாலிபன் சவச்சடங்கு நடக்குமட்டும் சவத்தின் தலைப்புறம் பேசாமல் அசையாமல் நின்றுகொண்டிருந்தான். அவன் கண்களில் ஒரு துளி ஜலங்கூட வரவில்லை. அவன் தேகத்திலுள்ள சதைக்கட்டுகளில் ஒன்றேனும் சற்றாவது துடிக்கவுமில்லை.

வயது முதிர்ந்த ஒரு பெரிய மனிதன் அவ்வாலிபன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். அவன் மிக்க மரியாதையுள்ள பெரிய மனிதனாய்க் காணப்பட்டான். அங்கிருப்பவர்களில் ஒருவருக்காவது அவன் அறிமுகமானவனல்ல. அப்படியிருந்தும் அவன் அங்கு நடக்கும் விஷயங்களை மிக்க அக்கரையோடு கவனித்துக்கொண்டிருந்தான். அவன் கண்களில் பெரிய மூக்குக்கண்ணாடி யணிந்திருந்தான்.

சடங்கெல்லாம் முடிந்தபின் சவத்தை யடக்கம்செய்வோர் சவத்தின் முகத்தின்மே லிருக்கும் மூடியை நீக்கி யாவரும் வந்து பாருங்கள் என்றழைத்தார்கள்.

முதல் முதல் சுத்தமாய்ச் சாதாரண உடையுடுத்த ஒருமாது சவத்தின் அருகிற் சென்று குனிந்து அதன் கன்னத்தில் முத்தமளித்தாள்.

அதன்பிறகு இதுகாறும் சவத்தின் தலைப்புறம் பேசாமல் நின்றிருந்த அவ்வாலிபன் சவத்தருகில் வந்தான். யாவரும் அவனையே யுற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவ்வாலிபன் குனிந்து சவத்தின் கன்னத்தில் ஒரு முத்தமளித்துவிட்டு நிமிர்ந்து நின்றான்.

